DMC
SRI LANKA

ආපදා කළමනාකරණ මධ්‍යස්ථානය
அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்
Disaster Management Centre

වාර්ෂික වාර්තාව 2021
ஆண்டு அறிக்கை 2021
Annual Report 2021



සුරක්ෂිත ප්‍රජාවක් සහ තිරසර සංවර්ධනයක් සහිත ශ්‍රී ලංකාවක්.
இலங்கையில் பாதுகாப்பான சமுதாயமும் நிலைபேறான அபிவிருத்தியும்.
Safer communities and sustainable development in Sri Lanka.



ஆண்டு அறிக்கை

2021

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

அட்டவணை

1		அறிமுகம்	1
	1.1	இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய சபை	1
	1.2	அனர்த்த முகாமைத்துவ விடயப் பரப்புக்குள் வரும் அனர்த்தங்கள	2
2		அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய சுருக்கம	3
	2.1	நோக்க, பணி மற்றும் நோக்கங்கள	3
	2.2	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகள்	4
	2.3	இடைக்கால முகாமைத்துவக் குழு (ஐஆஊ)	4
	2.4	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (யுஆஊ)	5
	2.5	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவன அமைப்பு	7
	2.5.1	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரிகளின் தகுதிகள்	7
	2.6	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாளர் விவரங்கள்	8
	2.6.1	2021 டிசம்பர் 31 இன் படி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலகுகளின் பணியாளர்கள்	8
	2.6.2	31 டிசம்பர் 2021 தேதியின்படி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டப் பிரிவுகளில் ஆயுதப்படை மற்றும் காவல்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஊழியர்களின் விவரங்கள்	9
	2.6.3	மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள்	10
	2.7	2021 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்தங்கள் மீதான பகுப்பாய்வு	11
	2.7.1	அனர்த்தங்களின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல்	11
3		தேசிய மட்டத்திலான முக்கிய செயற்பாடுகள்	15
	3.1	தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை 2022 – 2030 ஆம் ஆண்டுகளுக்காக தயார் சய்தல	15
	3.2	பிரதேச அனர்த்த முகாமைத்துவ திட்டத்துக்கான செயல்நுணுக்கத்தை தயார் செய்தல்	15
	3.3	நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டம் (ஐனுஆ)	16
	3.4	அனர்த்தங்களுக்கு மத்தியில் பரீட்சைகளில் தோற்றுதல் - க.பொ.த.(சா.த) பரீட்சை 2020	16
	3.5	பாதுகாப்பு நிலையங்களின் முகாமைத்துவம	17
	3.6	அனைத்து அபாயங்களையும் தணிப்பதற்கான சர்வதேச தினம் (ஐனுனுசுசு)	18
	3.7	உலக சுனாமி விழிப்புணர்வூட்டல் தினம் (றுவுயுனு)	19
	3.8	"தேடுதல் மற்றும் மீட்பு சிவில்- மிலிட்டரி கலந்துரையாடல்" பற்றிய சர்வதேச மாநாடு	20

3.9		கொவிட் 19 தொற்றினை ஒழிப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பங்களிப்பு	21
3.10		தற்போது அனர்த்த நிலைமைகளின் போது நிவாரணம் வழங்குதல் பற்றிய கலந்துரையாடல்	22
3.11		பூகோள வெப்ப நிலை வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களினால் நாட்டில் அதிகரித்து வரும் அனர்த்தங்கள் மற்றும் அனர்த்த அபாய நிலமைகளை முகாமைத்துவம் செய்தல்	23
4		2020ஆம் ஆண்டில் தொழில்நுட்ப பிரிவிலான முன்னேற்றம்	24
4.1		முன்னாயத்தம் மற்றும் திட்டமிடல் பிரிவு	24
	4.1.1	மாவட்ட மட்டத்திலான முன்னாயத்த திட்டங்கள்	25
	4.1.2	அனர்த்த முன்னாயத்தங்களுக்கு பதிலிருக்கும் திட்டம	25
	4.1.3	அனர்த்த அபாய பிரதேசங்களில் விளம்பர பதாகைகளை பொருத்துதல	26
	4.1.4	பருவப் பெயர்ச்சி முன்னாயத்த நிகழ்ச்சித்திட்டம் - தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச	27
	4.1.5	பாடசாலை அனர்த்த முன்னாயத்த திட்டங்களை தயார் செய்தல	31
	4.1.6	வைத்தியசாலை முன்னாயத்த நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல	31
	4.1.7	தேசிய சுனாமி ஒத்திகை நிகழ்ச்சித்திட்டம்	32
	4.1.8	காற்றின் வேகத்தை அனுமானித்தல் பற்றிய விழிப்புணர்வூட்டல் சுவரொட்டிகள்	33
	4.1.9	பாதுகாப்பு நிலையங்களுக்கு கள கட்டில்களை பகிர்ந்தளித்தல்	34
	4.1.10	முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்	34
	4.1.11	தற்போது அனர்த்த நிலைமையில் நிவாரணம் வழங்குதல் பற்றிய கலந்துரையாடல்	34
4.2		பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு	35
	4.2.1	தேசிய மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டம	35
	4.2.2	கண்காட்சிகள் வழியாக பொதுமக்கள் மற்றும் மாணவர்களை விழிப்புணர்வூட்டுவதற்காக கண்காட்சி தொகுதிகளை நிர்மாணித்தல்	36
	4.2.3	அனர்த்த அபாய முகாமைத்துவம் பற்றிய பூகோள வேலைத்திட்டங்கள் தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத்துவதற்கான பதாதைகளை நிர்மாணித்தல	37
	4.2.4	வள நிலையத்துக்கான நூலகம் புத்தகங்களை கொள்வனவு செய்தார	38
	4.2.5	பங்காளி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை தேசிய மட்டத்தில் பயிற்றுவித்தல்	38

	4.2.6	அனர்த்த அபாய முகாமைத்துவம் பற்றிய கொள்ளளவு அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டம்	39
	4.2.7	பாடசாலை பாட விதானத்தில் அனர்த்த அபாய முகாமைத்துவத்தை உள்ளீர்ப்பதற்கான தேசிய வேலைத்திட்டம்	40
	4.2.8	பல்கரும அபிவிருத்தி செயலணி மூலம் குறைந்த வருமானம் பெறும் 100,000 பேருக்கு தொழில் பயிற்சி வழங்கும் தேசிய வேலைத்திட்டம்	40
	4.2.9	ஊடக பேச்சு வார்த்தைகள் மற்றும் ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம்	41
	4.2.10	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இணையத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக பொதுமக்களுக்கு தகவல்களை தெரிவித்தல்	41
	4.2.11	தேசிய பாதுகாப்பு தின வேலைத்திட்டம்	42
	4.2.12	மாவட்ட மட்டத்தில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள	43
	4.2.13	கையேடுகளை அச்சிட்டு விநியோகித்தல்	44
	4.2.14	மாவட்ட மட்டத்தில் ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள்	44
	4.2.15	பணியாட்குழுவினர்களுக்கான கொள்திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள	45
4.3		தணித்தல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு	46
	4.3.1	அனர்த்த தணிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல	46
	4.3.2	அனர்த்த அபாயத்தை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்	48
	4.3.3	கல்வித்துறையில் அனர்த்த அபாய தணிப்பினை உள்ளீர்த்தல	49
	4.3.4	அனர்த்த அபாய தடுப்புக்கான நிறுவன ரீதியான பொறுப்புக்களையும் விடய பொறுப்புக்களையும் மக்களது உரிமைகளையும் உள்ளடக்கிய ஆவணத்தை தயார் செய்தல்	49
	4.3.5	வழக்கமான பயிற்சிகளை மேற்கொள்ளுதல் பற்றிய வழிகாட்டல்களை தயார் செய்தல்	50
	4.3.6	செந்தாய் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல	50
	4.3.7	அனர்த்த அபாய மதிப்பீடு	50
	4.3.8	தெரிவுசெய்யப்பட்ட 10 நகரங்களில் அனர்த்த அபாய மதிப்பீடு	51
	4.3.9	கல்வித்துறையில் அனர்த்த அபாய மதிப்பீட்டினை மேற்கொள்ளுதல	51
	4.3.10	அனர்த்த அபாயங்களை தணிப்பதற்கான உயர் அபாயமிக்க துறைகளை அடையாளம் கண்டு அனர்த்த அபாயங்களை மதிப்பீட்டு செய்யும் வேலைத்திட்டம்	51

	4.3.11	அனர்த்த அபாய மதிப்பீடு தொடர்பில் பங்குதார நிறுவனங்களுடன் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளும் வேலைத்திட்டம்	52
	4.3.12	அனர்த்தங்களின் இழப்புகள் மற்றும் சேதங்கள் குறித்து மதிப்பீடு செய்தல்	52
	4.3.13	னுநளளைநவெசய தரவுக் களஞ்சியத்தை இற்றைப்படுத்தல்	53
	4.3.14	சளைமகைழச அபாயத் தகவல் இணையத்தளம் (சளைமகைழ றநடி ிழவயட)	53
	4.3.15	செய்மதி புகைப்படங்களை பயன்படுத்தி அனர்த்தங்களுக்கு ஆளாகிய பிரதேசங்கள் மற்றும் தகவல்களை வெளிப்படுத்துதல்	53
	4.3.16	மாவட்ட மட்டத்தில் பொதுமக்களின் முறைப்பாடு, கோரிக்கைகள், பிரேரணைகள் மற்றும் விடயங்களை ஆராய்வதற்கான பதிலிருத்தல்	53
	4.3.17	ஏனைய நிறுவனங்களுடனான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்	54
4.4		அவசரகருமமாற்றல் நிலையம்	54
	4.4.1	இடம்பெற்றுள்ள அனர்த்தங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள அவசர கருமமாற்றல்கள் 2021	55
	4.4.2	ஓீசநளள ீநயசட கப்பலில் ஏற்பட்ட தீயை அணைப்பதில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பங்களிப்பு	58
	4.4.3	அவசரகருமமாற்றல் பிரிவினால் மேற்கொள்ளப்படும் ஏனைய பணிகள்	59
	4.4.4	2021ஆம் ஆண்டில் அவசகருமமாற்றல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள்	59
	4.4.5	மாவட்ட அவசகருமமாற்றல் கூடங்களை நவீனமயப்படுத்துதல்	60
	4.4.6	தேசிய அவசரகருமமாற்றல் திட்டம்	61
	4.4.7	தேடுதல் மற்றும் மீட்பு பற்றிய 5 பாடநெறிகளை நடாத்துதல	62
	4.4.8	2021 ஆம் ஆண்டில் அவசர பதிலிருப்புக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள கருவிகள்	63
	4.4.9	முன் அறிவித்தல்கள்	64
	4.4.10	அழைப்புக் கூடம்	66
	4.4.11	முப்படையினர் மற்றும் பொலிஸார் தொடர்பிலான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்	66
4.5		நிதி முன்னேற்றம் 31 மார்கழி 2021	68
	4.5.1	2021 டிசெம்பர் மாதம் 31ஆந் திகதியிலான நிதித் தேர்ச்சி	68
	4.5.2	10 ஆண்டு நிதி பதிவு - அனர்த்த முகாமைத்துவ நிலையம் (இணைப்பு 01)	
5		2021 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த பிரிவின் கீழான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	107

1. அறிமுகம்

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்துக்கான முக்கிய நிறுவனமாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் திகழ்கின்றது. குறிப்பிட்ட சகல பங்குதார்களினதும் ஒத்துழைப்புடன் அனர்த்தங்களை தணிப்பதற்காக தேசிய மற்றும் பிரதேச மட்டத்திலான வேலைத்திட்டங்களை ஒருங்கிணைக்கும் மற்றும் நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.


இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் கீழ் இயங்குமொரு நிறுவனமாக, 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தின் 8வது பிரிவின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தாபிக்கப்பட்டுள்ளது. தேசிய கொள்கைகளை தயார் செய்வதன் வழியாக செயன்நுணுக்க வழிகாட்டலை வழங்கும் பணியானது, இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், பொது நிருவாக மற்றும் அனரத்த முகாமைத்துவ அமைச்சானது அதற்கான வழிகாட்டலை மேற்கொள்கின்றது. பதிலிருப்பினை அடிப்படையாகக் கொண்ட பொறிமுறையினின்றி விலகி, முற்போக்கானதொரு அணுகுமுறையை அடைவதற்கான கொள்கைரீதியான மாற்றலுக்காக, இலங்கையில் இடர் முகாமைத்துவத்தை ஒட்டுமொத்தமாக உள்ளடக்கும் இடர் அபாயத்தை தணிக்கும் வேலைத்திட்டங்களுக்கான பணிச்சட்டகமாக 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இச்சட்டம் அமைந்துள்ளது.

இச்சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முக்கிய பணிகளாக, அனர்த்தங்களைத் தணித்தல், முன்னாயத்தங்களை திட்டங்களைத் தயார் செய்தல், பொதுமக்களை விழிப்புணர்வூட்டுதல், அபாயத்துக்கு முகம் கொடுத்துள்ள மக்களுக்கு அபாய முன்னெச்சரிச்சரிக்கைகளை விடுத்தல், அவசரநிலைமைகளின்போதான கருமமாற்றல் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய முக்கிய நிறுவனங்களுடன் இணைந்த நிவாரணங்கள் மற்றும் இடருக்குப் பின்னரான முகாமைத்துவ நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் ஆகியவையாக அமைந்துள்ளன. பிரதேச மட்டத்திலான இடர் அபாய நிலைமைகளை தணிக்கும் நடவடிக்கைகளை சகல மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட இடர் முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் அமைக்கப்பட்டுள்ளது.

1.1 இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபை

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தின் குறிப்பிடப்படும் சட்டரீதியான ஏற்பாடுகளுக்கு அமைவாக இடர் முகாத்துவத்துக்கான தேசிய சபையானது 2005ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டுள்ளது. இது அனர்த்த முகாமைத்துவத்தின் முக்கிய நிலையமாகத் திகழ்வதுடன், இது அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதமரின் உபதலைமைத்துவத்துடனான உயர் மட்டத்திலான சகல அமைச்சுக்களினதும் பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளதொரு நிறுவனமாகும். அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் ஏனைய அங்கத்தவர்களாக சட்டத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள தெரிவுசெய்யப்பட்டுள்ள விடயங்களுக்குப் பொறுப்பாகவுள்ள கௌரவ அமைச்சர்கள், மாகாண முதலமைச்சர்கள் (முதலமைச்சருக்கு சமூகமளிக்க முடியாதவிடத்து அவ்மாகாண சபையின் ஆளுநர்) மற்றும் பாராளுமன்றத்தின் எதிர்கட்சி உறுப்பினர்கள் ஐவரை உள்ளடக்கியதொரு குழுவினர் காணப்படுகின்றனர். (குறிப்பு 1.1)

இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபையின் கட்டமைப்பு



குறிப்பு 1.1: தேசிய சபையின் கூட்டிணைப்பு

1.2 அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பில் உள்ளடங்கும் அனர்த்தங்கள்

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாத்துவத்தின் கீழ் கொள்ளப்படும் இடர்கள்

- மண்சரிவு
- சூறாவளி
- வெள்ளம்
- வறட்சி
- தொழிநுட்ப அனர்த்தங்கள்
- சுனாமி
- பூமியதிர்ச்சி
- வான் இடர்கள்
- சமுத்திர இடர்கள்
- தீ
- தொற்றுநோய்கள்
- வெடிப்புகள்
- வான் தாக்குதல்
- சிவில் அல்லது உள்ளக போராட்டங்கள்
- இரசாயன விபத்துக்கள்
- கதிர் தொடர்பிலான திடீர் நிலைமைகள்
- உள்ளக மற்றும் கடற் பிரதேசத்திலான கசிவுகள் உள்ளிட்ட எண்ணெய்க் கசிவுகள்
- அணுசக்தி அனர்த்தங்கள்
- நகர மற்றும் காடுகள் தீப்பிடித்தல்
- கடலரிப்பு
- டொனாடோ, மின்னல் தாக்குதல் மற்றும் கடும் முழக்கத்துடனான சூறாவளி

2. அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றிய சுருக்கமான அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தேசிய பொறுப்பாக, ஏற்படக்கூடிய எந்தவொரு அனர்த்த நிலைமையினையும் வினைத்திறன்மிக்கதாக முகாமைத்துவம் செய்து பொதுமக்களது உயிர் மற்றும் சொத்துக்களைக் பாதுகாத்தவாறு பாதுகாப்பானதொரு சமூகத்தை உருவாக்குதல் ஆகும். இதற்காக பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் ஏழு பிரிவுகளைக் கொண்டதாக அனர்த்த முகாமைத்துவ செயன்முறை அமைந்துள்ளது.

இதற்கேற்ப இதன் முக்கிய பிரிவுகள் பின்வருமாறாகும்.

1. அனர்த்த தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு
2. அனர்த்த முன்னாயத்த மற்றும் திட்டமிடல் பிரிவு
3. பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு
4. திடீர் கருமமாற்றல் மற்றும் அபாய முன்னறிவித்தல் பிரிவு
5. மனித வளம் மற்றும் நிருவாகப் பிரிவு
6. நிதிப் பிரிவு
7. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள தேசிய பொறுப்புக்களை நாடுபூராகவும் நடைமுறைப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கீழ் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகள் சகல மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டு அனர்த்த முகாமைத்துவ பொறிமுறை வினைத்திறன்மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் நாட்டினுள் செயற்படுத்தப்படுகின்றது.

2.1 நோக்கு, பணி மற்றும் நோக்கம்

நோக்கு

இலங்கையில் பாதுகாப்பான சமுதாயமொன்றை ஏற்படுத்துவன் மூலம் நிலையான அபிவிருத்தியை அடைதல்

பணி

இயற்கை, தொழிநுட்பம் மற்றும் மனிதர்களின் செயற்பாடுகள் காரணமாக ற்படும்அனர்த்தங்களை சீராக முகாமைத்துவம் செய்வதன் மூலம் சமூகத்திலும் பொதுவாக குடும்ப அலகுகளிலும் பாதுகாப்பான கலாச்சாரமொன்றை உருவாக்குவதல்.

நோக்கம்

அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சபைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மாவட்டங்கள், பிரதேச செயலகப் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஆகிய நாடளாவிய நிருவாக கட்டமைப்பின் மூலம் பின்வரும் பணிகளை ஒருங்கிணைத்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிகள்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள முக்கிய பொறுப்புகள்,

- தேசிய கொள்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டமொன்றையும், தேசிய அவசர கால திட்டமொன்றையும் வகுத்தல்.
- அனர்த்தங்களை வரைபடங்களில் உள்ளடக்குதல் மற்றும் அனர்த்த பாதிப்புக்களை மதிப்பிடுதல்.
- பயிற்சி மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்
- முன்ஆயத்த திட்டங்களை தயாரிப்பதற்காக அரச நிறுவனங்களுக்கு உதவுதல் உட்பட அனர்த்தங்களின்போதான பதில் நடவடிக்கைகள் மற்றும் முன்னாயத்தங்களைச் செய்தல்
- அனர்த்த முன்னெச்சரிக்கைகளை விடுத்தல் மற்றும் அவற்றை பிரச்சாரம் செய்தல்
- அவசர கால நிலமைகளின்போதான கருமமாற்றல்களை முகாமைத்வம் செய்தல் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- நிவாரணப் பொருட்களைப் பகிர்ந்தளித்தல் உட்பட அனர்த்தத்துக்குப் பின்னரான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அனர்த்தங்களைத் தணித்தல்
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள்
- அனர்த்த ஆபத்துக்களைக்குறைத்தல் மற்றும் அதனை அபிவிருத்திப் பணிகளில் உள்ளடங்குதல்
- காலநிலை மாற்றங்களுடன் இசைந்து செல்லும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- உரிய நேரத்தில் தமது பொறுப்புக்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்தலும், அனர்த்த பாதிப்புக்களைக் குறைக்கும் பணிகள் தொடர்பாக அமைச்சுக்கள், அரச அதிகாரிகள், தாபனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதலும்.
- அனர்த்த பாதிப்புக்களைக் குறைத்தல், அது தொடர்பான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நிலைமைகளை அனர்த்தங்களின் பின்னர் வழமை நிலமைக்கு கொண்டு வருவதற்காக வெளிநாட்டு நன்கொடைகளை ஒருங்கிணைத்தலும் நடைமுறைப்படுத்துதலும்

2.3 இடைக்கால முகாமைத்துவ குழு (IMC)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் கருமமாற்றல் செயன்முறையானது இடைக்கால முகாமைத்துவ குழுவாகும். இது அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் தலைமையில் இடம்பெறுவதுடன், 2021ஆம் ஆண்டில் 4 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. .அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவ குழுவின் கட்டமைப்பு பின்வருமாறாகும்.

அனர்த்த முகாமைத்துவ விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் - தலைவர் - தலைவர்
ஜெனரால் ஜீ.டீ.எச்.கமல் குணரத்ன (ஓய்வு) டபிள்யுடபிள்யுவீ ஆர்டபிள்யுபீ ஆர் எஸ்பீ யூஎஸ்பீ யூஎஸ்பீ என்டீசி பீஎஸ்சீ

பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம், மேஜர் ஜெனரால் எஸ்.ரணசிங்க (ஓய்வு) ஆர்டபிள்யுபீ ஆயர்எஸ்பீ எம்எஸ்சீ என்டீயூ பீஎஸ்சீ - செயலாளர்

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பிரதிநிதி - அங்கத்தவர்
ஏ.என்.அமரதுங்க,பணிப்பாளர்
அங்கத்தவர்

பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதி - அங்கத்தவர்
ஆர்.எம்.பீ.எஸ்.ரத்நாயக்க, மேலதிக செயலாளர்

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் பிரதிநிதி – அங்கத்தவர் - அங்கத்தவர்
எம்.ஏ.எஸ்.மஹேஷி, மேலதிக செயலாளர்

புணிப்பாளர் நாயகம், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு, கலாநிதி ஆசிரி கருணாவர்தன - அங்கத்தவர்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் தலைமை அதிகாரி - அங்கத்தவர்
திரு.எச்.யூ.ஆர். பொன்சேக்கா

2.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு (AMC)

2020ஆம் ஆண்டு முதல் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அங்கத்தவர்களின் கூட்டிணைப்பு பின்வருமாறாகும்.

01	திருமதி.ஏ.என்.அமரதுங்க –பணிப்பாளர், திறைசேரி வரவு – செலவு திணைக்களம், பொதுத்திறைசேரி	தலைவர்
02	திரு.ஆர்.எம்.பீ.எஸ். ரத்நாயக்க - மேலதிக செயலாளர் (பாராளுமன்ற அலுவல்கள் மற்றும் கொள்கைகள்) , பாதுகாப்பு அமைச்சு	அங்கத்தவர்
03	திரு.எச்.யூ. ஆர்.பொன்சேக்கா – தலைமை கணக்காளர், அனர்த்த முகாத்துவ பிரிவு	அங்கத்தவர்
04	திருமதி.கே.ஏ.எஸ். மஹேஷி – மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு	அங்கத்தவர்
05	திருமதி. எல்.ஜ.பீ. சந்தமாலி - கணக்காய்வு அத்தியட்சகர் (ப.க.), தேசிய கணக்காய்வு அலுவலகம்	கண்காணிப்பாளர்
06	ஆர்.ஏ.என்.டீ.ரணதுங்க - தலைமை உள்ளக கணக்காய்வாளர், அனர்த்த முகாமைத்துவ பிரிவு.	கண்காணிப்பாளர்
07	மேஜர் ஜெனரால் எஸ்.ரணசிங்க (ஓய்வு)– பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாத்துவ நிலையம	செயலாளர்
08	திரு.ஜே.எச்.பீ.ஜயலத் – உள்ளக கணக்காய்வாளர், அனர்த்த முகாமைத்துவ நிலையம	ஒருங்கிணைப்பாளர

தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் நிலையத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு மதிப்பீடு காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் குறித்து இதன்போது பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. முக்கியமாக உள்ளக கணக்காய்வாளரினால் 2021ஆம் ஆண்டுக்காக தயார் செய்யப்பட்டுள்ள இடர்அபாயத்தை அடிப்படையாகக் கொண்ட வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டத்துக்கு ஏற்ப, உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் நிறுவனத்தின் கருமமாற்றல் செயன்முறை, கட்டுப்பாட்டு செயன்முறை மற்றும் அனர்த்த முகாமைத்துவ செயன்முறை தொடர்பில் காட்டப்பட்டள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் இக்குழுவில் தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன், நிறுவனத்தின் குறிக்கோளை அடைவதற்கு உதவும் வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினால் விதப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.


இதற்கமைய நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134இல்காட்டப்படுள்ள விடயப்பொறுப்புக்கள், முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றிக்கைகளில் காட்டப்பட்டுள்ள ஆலோசனைகள், இலங்கை தரக்கட்டுப்பாடு மற்றும் தேசிய கணக்காய்வு சட்டத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் விடயங்களை ஆராய்ந்தறித்து, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நோக்கங்களை அடைவதமற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முகாமைத்துவத்துக்கு தேவையான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், கணக்காய்வு உசாவல்கள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்படும் அவதானிப்புக்கள் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் விதப்புரைகள் மீது நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் பிழை திருத்தங்களின் அளவுசார்தன்மை மற்றும் தரம் குறித்து இதன்போது மேலும் விடயங்கள் ஆராய்ந்தறியப்பட்டுள்ளன.

நிலவிய கொவிட் 19 பெருந்தொற்றிற்கு மத்தியிலும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2021ஆம் ஆண்டுக்கான (02) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை முறையாகவும் சரியாகவும் முன்னெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்கள் முகாமைத்துவத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு ஏற்புடைத்ததாக இலங்கை வளங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியவாறு, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள், வேலைத்திட்டங்கள் மற்றும் விடயப்பொறுப்புக்களின் முன்கூட்டி நிச்சயிக்கப்பட்டுள்ள நோக்கங்களை அடையும் நோக்கில், வளங்கள் சிக்கனமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சகல முகாமைத்துவ பிரிவினையும் மீளாய்வு செய்தல் மற்றும் குறிப்பிட்ட செயற்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியை செலவிடுவதற்காக, அங்கீகாரம் பெறப்பட்டுள்ள காலகட்டத்துக்குள் குறிப்பிட்ட நோக்கங்கள் உண்மையாக அடையப்பட்டுள்ளனவா என்பதையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் மற்றும் திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு முன்னெடுக்கப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதில் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன், இப்பணிகளை எதிர்வரும் ஆண்டுகளிலும் சிறப்பாக முன்னெடுப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் திட்டமிட்டுள்ளது.

2.5 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு

குறிப்பு 2.1இல் காட்டப்பட்டுள்ளவாறு, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் நிறைவேற்றப்படும் பல்வேறு பணிகளையும் வேலைத்திட்டங்களையும் கருத்தில் கொண்டு இந்நிறுவனக் கட்டமைப்பானது தயார் செய்யப்பட்டுள்ளது.



குறிப்பு 2.1: அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனக் கட்டமைப்பு

2.5.1 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அதிகாரிகளின் தகுதிகள்

அட்டவணை 2.1: பணியாளர் அதிகாரிகளின் தகுதிகள்

பெயர்	நிலை	கல்வி தகுதி
மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க RDP RSP MSc NDU Psc	பணிப்பாளர் நாயகம்	இளங்கலை அறிவியல் (போர் ஆய்வுகள்) (பாகிஸ்தான்) அறிவியல் (இராணுவ மற்றும் அரசியல் வியூகம்) (ஒழுக்கம்) அறிவியல் (போர் ஆய்வுகள்) (பாகிஸ்தான்) டிப்ளமோ (பணியாளர் மேலாண்மை)
ரொஹான் பிரியந்த சமரக்கொடி	மேலதிக பணிப்பாளர் நாயகம்	இளங்கலை அறிவியல் (பகுப்பாய்வு வேதியியல்) அறிவியல் (சிறப்பு) (வேதியியல்) C.Chem. M.I.Chem. C
திசாநாயக்க முதியன்சேலாகே சுகாதாதாச	பணிப்பாளர் (விழிப்புணர்வு)	முதுநிலை (சமூகவியல்) முதுநிலை (குற்றவியல்) போஸ்ட் டிப்ளமோ (சர்வதேச விவகாரங்கள்) BA (சிறப்பு) (சமூகவியல் மற்றும் குற்றவியல்)
ஜயவீர முதியன்சேலாகே சுனில் ஜயவீர	பணிப்பாளர் (ஆயத்த பிரிவு)	இளங்கலை அறிவியல் (கிராமப்புற மற்றும் நகர திட்டமிடல்) முதுகலை டிப்ளமோ (அப்ளைடு சோஷியாலஜி) அறிவியலில் (சிறப்பு) (சொத்து மேலாண்மை மற்றும் மதிப்பீடு) பட்டய நகரக் கட்டிடக் கலைஞர்

அமரசிங்க ஆராச்சிலாஜ் அனோஜா குமாரி செனவிரத்ன	பணிப்பாளர் (தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு)	இளங்கலை அறிவியல் (ஜியோடேட்டா சயின்ஸ் மற்றும் ஜியோசர்வே) (நெதர்லாந்து) முதுகலை டிப்ளமோ (மனித வள மேலாண்மை) அறிவியலில் (சிறப்பு) (புவியியல்) டிப்ளமோ (சர்வதேச உறவுகள்) பட்டயப் பொறியாளர்களின் நிறுவனம் (IA) (பகுதி I & II)
கிறிபிட்டிய அபேசின்ஹகே நிஷாந்த	பணிப்பாளர் (நிதி)	இளங்கலை அறிவியல் (தொழில்முறை கணக்கியல்) அறிவியலில் (கணக்கியல் மற்றும் நிதி மேலாண்மை)
வெலிஹிந்த பத்திரண்ணேஹெலாகே அத்தீப கமல்ஜித் திலகரத்ன	பணிப்பாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்)	இளங்கலை அறிவியல் (மேலாண்மை) இளங்கலை கலை டிப்ளமோ (மேலாண்மை)
பிரிகேடியர் வெலிவேரிய லியனகே அனில் கிரிஷாந்த பெரேரா RDP RSP USP	பணிப்பாளர் செயல்பாடுகள்	இளங்கலை அறிவியல் (பாதுகாப்பு ஆய்வுகள்) டிப்ளமோ (பாதுகாப்பு மேலாண்மை) டிப்ளமோ (சர்வதேச உறவுகள்)PQHRM (CIPM), NDHRTD (CIPM)

2.6 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியாளர் விவரங்கள்

2.6.1 2021 டிசம்பர் 31 இன் படி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலகுகளின் பணியாளர்கள்

அட்டவணை 2.2: 2021.12.31 ஆந் திகதியிலான பணியாட்குழுவினர் பற்றிய விபரம்

ஊழியர் விபரம்	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை
பணிப்பாளர் நாயகம்	01	01	0
மேலதிக பணிப்பாளர் நாயகம்	01	01	0
பணிப்பாளர்	06	05	01
உள்ளக கணக்காய்வாளர்	01	01	0
பிரதி பணிப்பாளர்	18	0	18
உதவி பணிப்பாளர்	15	11	04
உதவி பணிப்பாளர் (மாவட்டம்)	25	23	02
கணக்கீட்டு உத்தியோகத்தர்	01	01	0
நிருவாக உத்தியோகத்தர்	01	0	01
விசாரணை உதவியாளர்	01	1	0
பிரத்தியேக உத்தியோகத்தர்	01	0	1
தூரத்தை அளவிடுதல் /புவியியல் தரவு முறைமை பகுப்பாய்வாளர்	01	01	0
தரவு முறைமை பகுப்பாளர்	01	01	0
தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர்	01	0	01
வலையமைப்பு நிருவாகி	01	0	01
நூல் நிலைய அதிபர்	01	0	01

அபிவிருத்தி உத்தியோகத்தர்	101	0	101
மொழிபெயர்ப்பாளர்	02	0	02
தகவல் தொழிநுட்ப உதவியாளர்	06	05	1
நிழற்புகைப்படக் கலைஞர்	01	01	0
தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர்	03	01	02
வானொலி இயக்குநர்	01	01	0
முகாமைத்துவ உதவியாளர் / அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்	201	174	27
சாரதி	39	39	0
அலுவலக உதவியாளர்	35	35	0
மொத்தம்	**465**	**302**	**163**

2.6.2 31 டிசம்பர் 2021 தேதியின்படி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டப் பிரிவுகளில் ஆயுதப்படை மற்றும் காவல்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஊழியர்களின் விவரங்கள்

அட்டவணை 2.3: 2021.12.31 திகதிக்கு ஆயுதப்படை மற்றும் காவல்துறையைப் பணியாளர் விளக்கம்

இடம்	இலங்கை இராணுவம்		இலங்கை கடற்படை		இலங்கை விமானப்படை		இலங்கை காவல்துறை		தொகை	
	அதிகாரிகள்	மற்ற பதவிகள்	அதிகாரிகள்	மற்ற பதவிகள்	அதிகாரிகள்	மற்ற பதவிகள்	அதிகாரிகள்	மற்ற பதவிகள்	அதிகாரிகள்	மற்ற பதவிகள்
அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமை அலுவலகம்	2	8	2	9	1	7	1	11	6	35
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - கொழும்பு	-	-	1	-	1	16	-	-	2	16
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - புத்தளம்	-	-	-	-	1	6	-	-	1	6
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - ஹம்பாந்தோட்டை	-	-	1	-	1	13	-	-	2	13
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - களுத்துறை	1	19	1	-	-	-	-	-	2	19
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - காலி	1	23	-	-	-	-	-	-	1	23
மாவட்டம் அ. மு. ஒ. பிரிவு - மாத்தறை	2	27	-	-	-	-	-	-	2	27
தொகை	**6**	**77**	**5**	**9**	**4**	**42**	**1**	**11**	**16**	**139**
மொத்த தொகை	**83**		**14**		**46**		**12**		**155**	


2.6.3 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள்

2.5.1. இந்தப் பிரிவு 25 மாவட்டங்களிலும் அமைந்துள்ளது. இந்த ஒவ்வொரு மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவுகளிலும் பதவியணியானது, உதவிப் பணிப்பாளர் (மாவட்டம்) மற்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் சாரதிகளையும் உள்ளடக்கியிருக்கும்.

மாவட்டம் அனர்த்தங்களுக்கு உள்ளாகக் கூடிய சாத்திய நிலமைக்கேற்ப மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை வேறுபடும். ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்குமிடத்து உதவிப் பணிபாளர்கள் (மாவட்டம்) 25பேர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள், அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளங்கலாக 109பேர், 25 மாவட்டங்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளில் இராணுவத்தினர் மற்றும் விமானப் படையினர் இணைக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினரின் நிருவாகத்தின் கீழும் ஏனைய மாவட்ட அலகுகள் சிவில் உத்தியோகத்தர்களின் நிருவாகத்தின் கீழும் முன்னெடுக்கப்படுகின்றன.

களுத்துறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் மாவட்ட செயலகங்களில் நிறுவப்பட்டுள்ளன. பின்வரும் உருவப்படம் 2.2இல் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பொறிமுறை காட்டப்பட்டுள்ளது.




குறிப்பு 2.2: மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பொறிமுறை

2.7 2021ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகள் பற்றிய பகுப்பாய்வு


2.7.1. அனர்த்தங்களின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்தல் - (www.desinventar.lk)

ஒட்டுமொத்த தாக்கம் - 2021


2021 ஆண்டில் வறட்சி, வெள்ளம், மண்சரிவு, மண்படைகள் சரிதல் கடும் புயல், தீப்பிடித்தல், இடிமின்னல் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை சுமார் 771,418 ஆகும். வெள்ளத்தினால் மாத்திரம் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை சுமார் 728,583 ஆகும். மேலும், வறட்சி காரணமாக சுமார் 8,915 பேரும், கடும் புயல் காரணமாக 27,267 பாதிக்கப்பட்டுள்ளனர். மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் காரணமாக உயிரிழந்துள்ளவர்களின் எண்ணிக்கை 189 என்பதுடன், 90பேர் காயமடைந்துள்ளனர். மேலும், 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயிரிழப்புக்கள் மற்றும் காயமடைதல் சம்பவங்களின் எண்ணிக்கை ஒப்பீட்டுரீதியில் அதிகரித்துள்ளது.



குறிப்பு 2.3 : ஒவ்வொரு அனர்தத்தினாலும் நேர்ந்துள்ள உயிரிழப்புகள்




குறிப்பு 2.4: உயிரிழப்புகள் மற்றும் காயமடைதல்கள் (2018 – 2021)



குறிப்பு 2.5: அனர்த்தங்களுக்கு இலக்காயியுள்ள நபர்களின் எண்ணிக்கை


வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் - 2021

2018, 2019, 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வீடுகள் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ள சம்பவங்களின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது. இவற்றில் 8,630 வீடுகள் பகுதியளவிலும் 264 வீடுகள் முழுமையாகவும் பாதிக்கப்பட்டுள்ளன.



குறிப்பு 2.6: 2018 முதல் 2021 வரையில் வீடுகள் முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்துள்ள விதம்


2021ஆம் ஆண்டு மே மற்றும் நவம்பர் மாதங்களில் அதிகளவிலான வீட்டு தேசங்கள் பதிவாகியுள்ளதுடன், பருவக்காற்று காரணமாக இடம்பெற்ற கடும் புயல் மற்றும் வெள்ள நிலைமைகள் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன. இந்த வீட்டு சேதங்கள் அதிகளவில் இரத்தினபுரி, கம்பஹ, கேகாலை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் பதிவாகியுள்ளன.



குறிப்பு 2.7: வீட்டு சேதங்கள் இடம்பெற்றுள்ள விதம்

ஒவ்வொரு அனர்த்தத்தினாலும் சேதமடைந்துள்ள / அழிவடைந்துள்ள வீடுகள் - 2021


2021 ஆம் ஆண்டில் அனர்த்தங்கள் காரணமாக இடம்பெற்றுள்ள வீட்டு சேதங்களைக் கருத்தில் கொள்கையில், வெள்ளம் காரணமாக 3791 வீடுகள் பகுதியளவிலும் 96 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. மேலும், கடும் புயல் காரணமாக 3961 வீடுகள் பகுதியளவிலும், 58 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன.




குறிப்பு 2.8: அனர்த்தங்களுக்கு ஏற்ப வீடுகள் தேமடைந்துள்ள விதம்

2021 ஆம் ஆண்டில் அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட மாவட்டங்கள்


மேற்குறிப்பிடப்பட்ட அனர்த்த நிலைமைகள் காரணமாக வீடுகள் சேதமடைந்துள்ள மாவட்டங்கள் பின்வருமாறாகுமென்பதுடன், இரத்தினபுரி மற்றும் கம்பஹ மாவட்டங்களில் அதிகளவான சேதங்கள் பதிவாகியுள்ளன.




குறிப்பு 2.9: 2021ஆம் ஆண்டில் வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள தேசங்கள் - மாவட்டவாரியாக




குறிப்பு 2.10: அனர்த்தங்களினால் உயிரிழப்புகள் எற்பட்டுள்ள விதம்



குறிப்பு 2.11: அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள விதம்



குறிப்பு 2.12: வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டள்ள நபர்கள்



குறிப்பு 2.13: வறட்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள நபர்கள்

3. தேசிய மட்டத்திலான முக்கிய செயற்பாடுகள்

3.1 தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை 2022 – 2030 ஆம் ஆண்டுகளுக்காக தயார் சய்தல்

2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம், தேசிய அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஏனைய அனைத்து திட்டங்களையும் திட்டமிடுதல் வேண்டும். தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டமானது இலங்கையின் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான பரந்த சட்டகத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், இது நாட்டினுள் அனர்த்த அபாயத்தை தணிக்குமொரு ஐந்தாண்டு திட்டமாகும். அனர்த்த முகாமைத்துவ சட்டத்துக்கு இணங்க மேற்குறிப்பிட்ட திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய அவர கருமமாற்றல் திட்டம், நிறுவனரீதியான அனர்த்த முகாமைத்துவ திட்டம் மற்றும் ஏனைய அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன.

ஐக்கிய நாடுகளின் அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான செந்தாய் சட்டகத்தின் பிரகாரம் தயார் செய்யப்பட்டுள்ள 2022 - 2030 வரையிலான அனர்த்த முகாமைத்துவ திட்டத்தின் எதிர்வரும் 08 ஆண்டு காலத்துக்காக தேசிய அனர்த்த திட்டத்தை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன.


3.2 பிரதேச அனர்த்த முகாமைத்துவ திட்டத்துக்கான செயல்நுணுக்கத்தை தயார் செய்தல்

பிரதேச அனர்த்த முகாமைத்துவ திட்டம் தொடர்பில் சட்டவரைவு தயார் செய்யப்பட்டுள்ளதுடன். இத்திட்டமானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின்

பணிப்பாளர்கள், உதவி பணிப்பாளர்கள், மாவட்ட உதவி பணிப்பாளர்கள் மற்றும் இது குறித்த விசேட அறிவினைக் கொண்டுள்ளவர்களது கருத்துக்கள் மற்றும் பிரேரணைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் செயலமர்வொன்று தம்புள்ளையில் இடம்பெற்றது. இதற்கு ஆசிய அனர்த்த முன்ஆயத்த நிலையம் (ADPC) நிதி உதவி நல்கியது.

3.3 நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டம் (IDMP) சகல அமைச்சுகளுக்குமான தயார்நிலை வழிகாட்டல்


2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின்10 வது பிரிவின் பிரகாரம் சகல அமைச்சுக்களுக்கும் அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சகல அரச நிறுவனங்களும் அனர்த்த அபாய முகாமைத்துவத் திட்டமொன்றை தயார் செய்தல் அவசியமாகும். மேலும், அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் 8 வது பிரிவின் மூலம் நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயார் செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பொறுப்பாகும். இதற்கமைய அனர்த்த முகாமைத்துவ நிலையமானது நிறுவன மட்டத்தில் தாக்குப் பிடிக்கக் கூடிய இயலுமையை கட்டியெழுப்புவதற்கு உதவும் அதேசமயம் இலங்கையின் தேசிய அனர்த்தங்களை தணிக்கும் உபாய வழிமுறைக்கு ஏற்ப தயார் செய்யப்பட்ட வழிகாட்டல்களை தயார் செய்து வெளியிட்டுள்ளது.



தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்துக்கு ஏற்ப ஒவ்வொரு நிறுவனத்துக்குமான உரிய நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயார் செய்தல் வேண்டும். நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை அபிவிருத்தி செய்கையில் சகல அமைச்சுகள், அரச நிறுவனங்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் கடைப்பிடிக்க வேண்டிய செய்முறை பற்றிய சுருக்கமான பகுப்பாய்வினை இந்த வழிகாட்டல் வழங்கும். அடையாளம் காணப்பட்டள்ள அரசாங்க நிறுவனங்கள் மத்தியில் இந்த வழிகாட்டல் புத்தகம் குறித்து விழிப்புணர்வூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3.4 அனர்த்தங்களுக்கு மத்தியில் பரீட்சைகளில் தோற்றுதல்- க.பொ.த. (சா.த.) - 2020

2020 ஆம் ஆண்டில் நடாத்தப்படவிருந்த க.பொ.த.(சா.த) பரீட்சை 2021 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. இப்பரீட்சை நடத்தப்பட்ட காலகட்டங்களில் அவசர அனர்த்தம் ஏற்படுமிடத்து மாணவர்களுக்கு தடையின்றி பரீட்சையில் தோற்ற கூடிய முறையில் பதிலிருப்பதற்கான திட்டமொன்று பரீட்சைகள் திணைக்களத்தின் கோரிக்கைக்கு ஏற்ப தயார் செய்யப்பட்டது. இந்த வழிகாட்டலை தயார் செய்கையில் COVID 19 பெருந் தொற்று, வானிலை, காலநிலை ஆகிய காரணிகளைக் கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சு, வளிமண்டலவியல் திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு ஆகிய நிறுவனங்களின் ஆலோசனைக்கு ஏற்ப தயார் செய்யப்பட்டது. இந்த வழிகாட்டலானது ஆசிய-பசிபிக் அமைப்பு (APAD) நிறுவனத்தின் நிதி அனுசரணையில் தயார் செய்யப்பட்டது.



3.5 பாதுகாப்பு நிலையங்களை முகாமைத்துவம் செய்தல்- பாதுகாப்பு நிலைய முகாமையாளர்களுக்கன கையேடு

அவசர அனர்த்தங்களின் போது அனர்த்தங்களுக்கு உட்படும் பொதுமக்களுக்கான பாதுகாப்பு நிலையங்களை தாபிக்க வேண்டும் என்பதுடன் இதற்கமைய இந்த பாதுகாப்பு நிலையங்களின் முகாமைத்துவம் திறன் மிக்கதாக அமைய வேண்டும் மேலும் COVID 19 பெரும் தோற்று காரணமாக இந்த நிலைமை மேலும் சிக்கல் நிலையை அடையலாம். இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு பாதுகாப்பு நிலையங்களுக்கு வரும் நபர்களின் பாதுகாப்பு மற்றும் அபிமானத்தை உறுதிப்படுத்தும் முகமாக அவசர உயிர்ப்பாதுகாப்பு உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாட்டினை தயார் செய்வது முக்கியமாகும். COVID 19 பெருந்தொற்றுக்கு மத்தியில் பாதுகாப்பு நிலையங்களின் முகாமைத்துவ தரங்கள் குறித்து முகாமையாளர்களுக்கு தேவையான ஆற்றல் மற்றும் அறிவினை வழங்குவதற்காக இக்கையேடானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தலைமையில் சுகாதார அமைச்சின் அனர்த்த முன்னாயத்த மற்றும் பதிலிருப்பு பிரிவு, ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியம், புலம்பெயரவிற்கான சர்வதேச அமைப்பு ஆகிய நிறுவனங்களிடமிருந்து தொழில்நுட்ப அறிவு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதற்கான நிதி பங்களிப்பு ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தினால் வழங்கப்பட்டது. இலங்கையில் பாதுகாப்பு நிலையங்களின் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தலைமை அரசு நிறுவனங்களின் அனைத்து உத்தியோகத்தர்களினதும் ஏனைய தரப்பினரகளினதும் வசதிக்காக இக்கையேடானது மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.





3.6 அனர்த்த அபாயங்களை தடுப்பதற்கான சர்வதேச தினம் (IDDRR)

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் அக்டோபர் 13ஆம் திகதி அனர்த்த அபாயங்களை தடுப்பதற்கான சர்வதேச தினமாக பெயரிடப்பட்டுள்ளது. 2015-2030 அனர்த்த அபாயங்களை தணிப்பதற்கானசெந்தாய் சட்டகத்துடன் உயிர் வாழ்க்கை, வாழ்வாதாரம் மற்றும் சுகாதாரம் பற்றிய அனர்த்த அபாயங்கள் மற்றும் சேதங்களை தணிப்பதில் நாடுகள் அடைந்துள்ள தேர்ச்சி குறித்து கலந்தாலோசிப்பதற்காக அங்கத்துவ நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதொரு சந்தர்ப்பமாகும். அனர்த்த அபாயத்தை தணிப்பதற்காக சர்வதேச தினமான 2021 ஒக்டோபர் 13 ஆம் திகதி நாம் எல்லோரும் மாத்திரமே இந்த கோல் மண்டலத்தை பாதுகாக்க முடியும் என்னும் தலைப்பில் செந்தாய் சட்டகத்தின் இலக்கு F ஐ அடிப்படையாகக் கொண்டு அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான சர்வதேச தினம் கொண்டாடப்பட்டது.

இந்த அனர்த்த அபாயத்தை தடுப்பதற்கான சர்வதேச நிகழ்ச்சியானது அரச முகாமைத்துவ நிலையத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் 2021 ஒக்டோபர் 13 ஆம் திகதி கொழும்பு BMICH இல் பிற்பகல் 1.00 முதல் 4.30 மணி வரை நடத்தப்பட்டது. (இரு வழி டூ ஒன்லைன் மற்றும் பௌதீக) முறையில் நடாத்தப்பட்டதுடன், நிகழ்ச்சியின் தலைப்பாக COVID 19 மற்றும் முறைசார் அபாயம் அமைந்தது. இந்த வைபவமானது இலங்கையின் கண் நோக்கில் தொற்று காரணமாக கருத்தில் கொள்ளத் தக்க வகையில் பாதிக்கப்பட்டுள்ள துறைகள் மீது கவனம் செலுத்தப்பட்டது. அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான சர்வதேச தினமானது, உலக அமைப்பு தலைவர்களின் விசேட செய்திகள் உள்ளிட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்வள்ளமையாளர்கள் மற்றும் புலமையாளர்களினால் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்கள் மீதான விசேட அறிவினை பரிமாறிக் கொள்ளுதல் மற்றும் கலந்தாலோசித்தல் ஆகியன வைபவமாக நடந்தேறியது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பதிவு செய்யப்பட்ட பங்கேற்பாளர்கள் 500பேர் இணையத்தின் மூலம் தொடர்பு கொண்டதுடன் 1500 ஆதரவாளர்கள் யூடியூப் மூலம் பங்கேற்றனர். ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராஜ்யம், அவுஸ்திரேலியா, சாம்பியா, மாலைதீவு, மலேசியா, கென்யா, ஜப்பான், இந்தியா, பெலரூஸ், ஹய்டி, மெக்சிகோ, சீனா, பீஜீ, மியான்மார், பங்களாதேஷ், நைஜீரியா, ஜோர்தான், பிறசில், கெம'ரூன், பிலிப்பின், சவுதி ஆகிய நாடுகளிலிருந்து வெளிநாட்டவர்கள் பங்கேற்றனர். அராப

சோமாலியா, தன்சானிய, நவசீலாந்து, கொங்கோவா, இந்தோனேசீயா, பொஸ்னியா நாடுகளிலிருந்து சமூக வலைத்தளங்கள் ஊடாக கலந்து கொண்டனர். இந்நிகழ்விற்கு Huddersfield பல்கலைக்கழகம் (UK) மற்றும் ஆசிய முன்னாயத்த நிலையம் ஆகியன அனுசரணை வழங்கின.




3.7 உலக சுனாமி அறிவுறுத்தல் தினம் (WTAD)

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அக்டோபர் ஐந்தாம் தேதி உலக சுனாமி அறிவுறுத்தல் தினமாக 2015 ஒக்டோபர் 15 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. இது உலகம் பூராவும் சுனாமி பற்றிய விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்கும் அபாயங்களை தணிப்பதற்கான புதிய வழிமுறைகளை பகிர்ந்து அளிப்பதற்கும் தம்மை அர்ப்பணித்துள்ளது. இத் தினத்தை கொண்டாடுவதற்காக அனர்த்த முகாமைத்துவம் நிலையமானது COVID-19 தொற்றுக்கு மத்தியில் "கற்றுக்கொள்ளுங்கள், பகிர்ந்து அளியுங்கள், செயற்படுங்கள்" எனும் தலைப்பின் கீழ் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் வைபவம் ஒன்றை நடாத்தியது. சுனாமி அபாய முன்னறிவித்தல் மற்றும் பணிகளுக்கான சர்வதேச ஒத்துழைப்பானது நாட்டின் கரையோர மாவட்டங்கள் பதினான்கிலும் (14) மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளை (DDMCU) ஒருங்கிணைத்து உள்நாட்டு நிகழ்ச்சியினை 2021 நவம்பர் 5ஆம் திகதி நடத்தியதுடன், உதவிப் பணிப்பாளர்கள் அந்தந்த மாவட்டங்களுக்காக தயார் செய்யப்பட்ட சுனாமி செயற்பாட்டு திட்டங்களை முன்வைத்தனர். மட்டுப்படுத்தப்பட்ட நபர்களின் பங்கேற்பில் சர்வதேச நிகழ்ச்சியானது (இரு வழி) 2021 நவம்பர் 8ஆம் திகதி அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. சுனாமி பேரழிவு தொடர்பான பிரதான தலைப்புகள் குறித்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாழ்க்கை தொழிலாளர்களும் புலமையாளர்கள் வெளியிட்டுள்ள கருத்துக்களை பரிமாறிக் கொள்ளுதல் இதன் முக்கிய நோக்கமாக அமைந்தது. இந்த சர்வதேச சுனாமி விழிப்புணர்வுடன் தினத்தில் பங்கேற்றவர்களில் உள் நாட்டவர்கள் 39% மற்றும் வெளிநாட்டவர்கள் 61% ஆகும். வெளிநாட்டவர்கள் இந்தியா, ஆப்கானிஸ்தான், அல்ஜீரியா, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், பிறேசில் மற்றும் கனடா போன்ற நாடுகளிலிருந்து பங்கேற்றதுடன், சீனா, கொலம்பியா, எகிப்து, பிரான்ஸ், ஜோர்ஜியா, கானா, கனடா, கோத்தமாலா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, கென்யா, லிபியா, மடகஸ்கார், மலேசியா, மொரி'ஸ், மெக்சிகோ, மியான்மார். நேபாளம், நவசீலாந்து, நைஜீரியா, நோர்வே, ஓமான், பாகிஸ்தான், பனாமா, பிலிப்பின், போர்த்துக்கல், கட்டார், செனகல், தென் ஆபிரிக்கா, தாய்லாந்து, ஐக்கிய இராச்சியம்,

ஐக்கிய அரபு எமீர் ராஜ்யம், ஐக்கிய நாடுகள் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய 85 நாடுகள் பௌதீக ரீதியில் பங்கேற்றன. இந்நிகழ்விற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) அனுசரணை வழங்கியது.





உலக சுனாமி விழிப்புணர்வூட்டல் தினம்

3.8 தேடுதல் மற்றும் மீட்பு சிவில் - இராணுவ கலந்துரையாடல்" பற்றிய சர்வதேச மாநாடு

தேடுதல் மற்றும் மீட்பு சிவில் இராணுவ கலந்துரையாடல்" பற்றிய சர்வதேச மாநாடானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற ஜெனரல் சுதந்த ரணசிங்கவின் தலைமையில் ஜப்பான் தூதுவராலயத்தின் முதலாவது செயலாளர் திருமதி கொரி ஐ சியாகோ மற்றும் பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் டாக்டர் திரு.ஹேமந்த ஹேரத்தின் பங்கேற்புடன் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கேட்போர் கூடத்தில் 2021 இல் இடம்பெற்றது.

அரசு மற்றும் தனியார் துறை புலமையாளர்களின் பங்கேற்புடன் இதனுடன் ஒருங்கிணைந்தாக அனர்த்த முகாமைத்துவ செயன்முறையில் "தேடுதல் மற்றும் மீட்பு சிவில் மிலிட்டரி கலந்துரையாடல்" என்பதை தலைப்பாகக் கொண்டு அறிவார்ந்த கலந்துரையாடல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இடம்பெற்றது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்காக ஆசியா பசிபிக் அமைப்பின் அனுசரணையில் அனர்த்த முகாமைத்துவ செயன்முறையில் சர்வதேச தரத்திற்கு அமைய தேடுதல் மற்றும் மீட்பு குறித்து சிவில், முப்படைகள், பொலீசார் உள்ளிட்ட பாதுகாப்பு பிரிவு உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்படுவதுடன் இப்பயிற்சியை சிறப்பாகப் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்களுக்கான சான்றிதழ் வழகுதலும் இதனுடன் ஒருங்கிணைந்ததாக மேற்கொள்ளப்பட்டன.





தேடுதல் மற்றும் மீட்பு மீதான சிவில் இராணுவ கலந்துரையாடல்

3.9 கொவிட் 19 (Covid 19) பெருந் தொற்றினை கட்டுப்படுத்துவதில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பங்களிப்பு

2021 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவம் நிலையமானது கொவிட் 19 பரவலை கட்டுப்படுத்துவதற்கான முக்கிய பணிகளை ஆற்றிய முக்கியமாக தென் மேற்கு மற்றும் வட மேல் பருவப் பெயர்ச்சி மழை ஏற்படக்கூடிய பிரதேசங்களை மையமாகக்கொண்டு ஏற்படக்கூடிய அனர்த்தத்தின் போது ஏற்படும் சுகாதார சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கான திட்டங்களை தயார் செய்தது. இது தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ நிலையமானது பல்வேறு பங்குதாரர் நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தியவாறு 200இற்கும் அதிகமானவர்களின் பங்கேற்பில் கொவிட் 19 பெருந்தொற்று காணப்படும் இடங்களில் செயற்பட வேண்டிய விதம் குறித்து வழிகாட்டல்களை தயார் செய்ததுடன் மூன்று மொழிகளிலும் பயிற்சி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தது.

மேலும், சுகாதார அமைச்சுடன் கொவிட் 19 பெரும் தொற்று காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமையின் போது தேடுகள் மற்றும் மீட்பு குழுக்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை தயார் செய்து அவற்றையும் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக சகல மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுகளிலும் கொவிட் 19 பெரும் தொற்றினை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளில் பங்கேற்றவாறு அனர்த்த பதிலிருப்புக்கு தேவையான தனியார் பாதுகாப்பு கருவிகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மனிதாபிமான நிறுவனங்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கொவிட் 19 காரணமாக ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகளின் போது பொதுமக்களை அறிவுறுத்துவது தேவையான கையேடுகள் மற்றும் சுவரொட்டிகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 25 மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டு பொது மக்களுடைய அறிவு மேம்படுத்தப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஊடக நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய செயலமர்வுகள் மூலம் சுகாதார அமைச்சினை தொடர்பு கொண்டு பொதுமக்களுக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர அழைப்பு இலக்கம் 117 இற்கு கிடைக்கப்பெற்றுள்ள கொவிட் 19 தொடர்பிலான தொலைபேசி அழைப்புகள் மீது ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.10 தற்போதைய அனர்த்த நிலைமையில் நிவாரணங்களை வழங்குதல் பற்றிய கலந்துரையாடல்கள்

கௌரவ பிரதமரின் தலைமையில் 2021 நவம்பர் மாதம் 16ஆம் திகதி மு.ப. 10.30இற்கு இலங்கை பாராளுமன்றத்தின் குழு அறை இலக்கம் 02இல் இடர் முகாமைத்துவத்திற்கான தேசிய சபையை பிரதிநித்துவம் செய்யும் 13 கௌரவ அமைச்சர்கள், 8 கௌரவ ராஜாங்க அமைச்சர்கள், இலங்கை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் 21 கௌரவ உறுப்பினர்கள், பங்குதார அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டில் நேரடியாக பங்கேற்கும் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் 22 தலைவர்களின் பங்கேற்புடன் 2021 நவம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு பற்றிய நிலைமைகள் குறித்தும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆழமாக கலந்துரையாடப்பட்டது. இதன்போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் திரு. சுதந்த ரணசிங்க நாட்டினுள் ஏற்பட்டுள்ள அந்த நிலைமைகள் குறித்தும் இதன்போது நிவாரணம் வழங்குதல் மற்றும் மீள்குடியேற்றத்தின் போது அடையாளம் காணப்பட்டுள்ள சிக்கல்கள் மற்றும் சவால்கள் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

இக்கலந்துரையாடலில் பதுளை, அனுராதபுரம், நுவரெலியா, கண்டி, கேகாலை, இரத்தினபுரி, குருநாகல், கம்பஹா, புத்தளம், மாத்தளை, களுத்துறை மற்றும் மொணராகலை மாவட்டங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கௌரவ அமைச்சர்களும் உறுப்பினர்களும் கலந்து கொண்டதுடன் அந்தந்த மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களின் அனர்த்த நிலைமைகள் குறித்து கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

<u>மீள் குடியமர்த்தும் தேசிய வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முகம் கொடுக்க நேர்ந்துள்ள சிக்கல்கள்</u>

- பதுளை, நுவரேலியா, கேகாலை, மாத்தளை, கண்டி மற்றும் குருநாகல் ஆகிய உயர் அபாயம் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்களை மீள் குடியமர்த்துகையில் மாற்றுக் காணிகள் காணப்படாமை பிரதான சிக்கலாக அமைந்துள்ளது.
- அடையாளம் காணப்பட்டுள்ள காணிகளை சுவீகரிக்க முடியாமை.
- காணிகளை பெற்றுக் கொள்வதற்கும் வீடுகளை நிர்மாணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு எல்லையானது இற்றைப்படுத்தப்படாமை.
- மீள் குடியமர்வதற்காக நிரந்தர வீடுகள் வழங்கப்படும் குடும்பங்களை முன்னர் குடியமர்ந்திருந்த இடங்களிலிருந்து நீக்குவது தொடர்பு முறையான சட்டங்கள் காணப்படாமை.

<u>அனர்த்த அபாயங்களை தணிப்பதற்காக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைகள்</u>

- அபாயத்துக்கு உட்பட்டுள்ள வீடுகளை முறையாகவும் கிராமமாகவும் குறிப்பிட்ட இடங்களிலிருந்து நீக்கி துரிதமாக மீள் குடியமர்த்துவதன் மூலம் அனர்த்த நிலைமைகளின் போது நிவாரணங்களை வழங்குவதற்காக ஏற்க வேண்டிய அதிகளவு பணத்தை மீதப்படுத்த முடியும்.
- கொழும்பு மாவட்டம் போன்ற சனத்தொகை கூடிய மாவட்டங்களில் மீள்குடியமர்த்துகையில் அடுக்குமாடி வீட்டுத் திட்ட முறைமையை தெரிவு செய்வது உகந்தது.

- பல்வேறு காரணங்களுக்காக மீள்குடியமர்வினை நிராகரிக்கும் குடும்பங்களுக்கு அடுக்கு மாடி வீட்டுத்திட்ட முறைமையை அறிமுகம் செய்தல்.
- வீடுகளை அமைப்பதற்காக கண்டி, நுவரெலியா, பதுளை ஆகிய பிரதேசங்களில் தோட்ட புறம் சார்ந்த காணிகளை பெற்றுக் கொள்வது மிகப் பொருத்தமானது என்பதைச் சுட்டிக் காட்டுதல்.

நிலவுகின்ற அனர்த்த நிலைமைகளை தணிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள்

- மீள் குடியமர்த்தல் பிரேரணைகளுக்கான காணிகளின் தேவையை அடையாளம் கண்டு தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் தலையீட்டில் உரிய கோரிக்கைகளை முறையாக மேற்கொள்வது.
- பொறுப்புக்கூற வேண்டிய சகல அரச நிறுவனங்களினதும் தலையிட்டுடன் இந்த அனர்த்த நிலைமையை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- பிரதேச செயலாளர்கள் மற்றும் பெருந்தோட்ட கமபனி உரிமையாளர்களுடன் கலந்தாலோசித்து காணி கைப்பற்றல் செயன்முறையை துரிதப்படுத்துதல்.
- வெள்ளப் பெருக்கினை தவிர்ப்பதற்காக நீர்ப்பாசன திணைக்களம், தாழ்நில அபிவிருத்தி சபை, கடலோர பாதுகாப்பு திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்பு கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களின் ஒருங்கிணைந்த பொறிமுறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதால் அனைத்து நிறுவனங்களும் இணைந்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.
- அரச நிறுவனங்களின் ஒருங்கிணைப்பில் காணிகளின் தேவைப்பாடு மற்றும் மாற்றுக் காணிகளை அடையாளம் காணுதல் பற்றிய பிரேரணையை மாவட்ட செயலாளர் மூலமாக காணி அமைச்சுக்கு முன்வைத்தல்.
- அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வீடுகளை புணரமைக்கையில் அல்லது காணிகளில் புதிய நிர்மாணப் பணிகளை மேற்கொள்கையில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் வீடமைப்பு கடனைப் பெற்றுக் கொள்வதற்கான இயலுமை காணப்படுவதனால் அத்தையை கோரிக்கைகளை மாவட்ட செயலாளர் மூலமாக முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- கட்டபே கன்னொருவ பிரதேசத்தில் மகாவலி கங்கையை அண்டியதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மணல் தீவு காரணமாக எதிர்காலத்தில் ஏதேனும் அர்த்தம் ஏற்படுவதற்கான இயலுமை காணப்படுவதனால் இது தொடர்பில் புவிச்சரிதவியல் மற்றும் ஆய்வு பணியகத்தின் முழுமையான அங்கீகாரத்தின் கீழ் உகந்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக குறிப்பிட்ட மணலை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது உகந்தது.

3.11 பூகோள வெப்ப நிலை வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களினால் நாட்டில் அதிகரித்து வரும் அனர்த்தங்கள் மற்றும் அனர்த்த அபாய நிலமைகளை முகாமைத்துவம் செய்தல்

நாட்டில் தீவிரமடைந்து வரும் அனர்த்த அபாயங்கள் காரணமாக ஏற்படும் அவசர அனர்த்த காரணமாக ஏற்படும் உயிர் வாழ்க்கை மற்றும் சொத்து அழிவுகள் அதிகரித்து

வருகின்றன.2021ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இலங்கை பாராளுமன்றத்தில் 2021.11.13ஆம் திகதி இது குறித்த திறந்த விவாதம் இடம்பெற்றதுடன் இதற்கமைய நாட்டில் காணப்படும் அனைத்து நிலைமைகளை கட்டுப்படுத்தியவாறு பொதுமக்களின் உயிர் வாழ்க்கை மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்காக நாட்டில் காணப்படும் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறையில் முக்கிய நிறுவனங்களின் நிபுணர்களை உள்ளடக்கிய குழு ஒன்றை நியமித்து கருத்துக்களையும் பிரேரணைகளையும் இலங்கை பாராளுமன்றத்துக்கு முன்வைக்குமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ ராஜாங்க அமைச்சின் செயலாளரது ஆலோசனையின்பேரில் தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ ராஜாங்க அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் மேலதிக செயலாளரது தலைமையில் சகல அனர்த்த முகாமைத்துவ செயன் முறையிலும் பங்களிப்பினையும் முக்கிய நிறுவனங்களின் நிபுணர்களின் கூட்டம் 2021.12.13ஆந் திகதி அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது தற்போது காணப்படும் சட்டதிட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் தேவையான முறையில் திருத்துவதற்கும் காணப்படும் அபாயம் மற்றும் எதிர்காலத்தில் எழக் கூடிய அனைத்து நிலமைகளை முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான நவீன தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் கடுமையான அனர்த்த அபாயங்களை தணிப்பதற்குத் தேவையான கட்டமைப்பு ரீதியான கருத்திட்டங்களுக்கு போதுமான நிதி ஏற்பாடுகளை உரிய நிறுவனங்களுக்கு வழங்குவதற்கும் நாட்டில் அனர்த்த நிலமைகளை உருவாக்குகின்ற நபர்கள் அல்லது குழுக்களுக்கு எதிராக செயற்படுவதற்கான வலுவான மற்றும் சட்டரீதியான செயன்முறையினை தாபித்தல் ஆகிய விடயங்கள் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டன.

4. 2020 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப பிரிவிலான முன்னேற்றம

4.1 முன்னாயத்தம் மற்றும் திட்டமிடல் பிரிவு

2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இடர் முகாமைத்துவ சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாவட்டங்கள் பிரதேச செயலக பிரிவுகள் அபாயத்துக்கு உட்பட்டுள்ள கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் அரசு துறை நிறுவனங்களுக்கான அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை தயார் செய்வதல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆயத்தம் மற்றும் திட்டமிடல் பிரிவின் பிரதான பணியாக அமைந்துள்ளது. வெள்ளம் மண்சரிவு சுனாமி கடும் புயல் ஆகியன இலங்கையில் வருடாந்தம் ஏற்படும் இடர்கள் தொடர்பில் முன்னாயத்த நடவடிக்கைகளை திட்டமிடுதல் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் முன்னேற்றம் மற்றும் திட்டமிடல் பிரிவினால் முன்னெடுக்கப்படும் பணிகளில் ஒன்றாகும்.

அனர்த்தம் ஒன்று நிகழ்கையில் அதற்குப்பதிலிருப்பதற்காக மாவட்ட மட்டத்தில் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு பங்களிப்பு நல்கும் ஒரு உதவி ஆவணமாக அனர்த்த முன்னாயத்த திட்டத்தை குறிப்பிடலாம். மாவட்டங்களில் இடம்பெறும் அனர்த்தங்களுக்கு பதிலிருக்கும் உயரிய முகாமைத்துவ நிறுவனமாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு திகழ்கின்றது. குழுவின் அங்கத்துவம் உப குழுக்கள் மற்றும் அவர்களது விடய பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் என்ன என்பது குறித்து இத்திட்டத்தினால் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

நிர்வாகப் பிரதேசம் பற்றிய தகவல் நிலவுகின்ற இடர்கள் அனர்த்த நிலைமை குறித்த தகவல்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள அனர்த்த நிலைமை மீதான மதிப்பீடுகள் முக்கிய நிலையங்கள் பற்றிய தகவல்கள் பிரதேசத்தில் காணப்படும் மனித வளங்கள் பௌதீக வளங்கள் மற்றும் இடர் பதிலிருப்பு பொறிமுறையுடன் தொடர்புடைய பல்வேறு தரப்பினர்களுடைய பொறுப்புக்கள் தொடர்பிலான தகவல்கள் இத்திட்டங்களில் உள்ளடங்குகின்றன.

4.1.1 மாவட்ட மட்டத்திலான முன்னாயத்த திட்டங்கள்

2021ஆம் ஆண்டுக்கு கிடைக்கப்பெற்ற ரூ.7.5 மில்லியன் ஐ பயன்படுத்தி மாவட்ட மட்டத்திலான வேலைத்திட்டங்கள் முகாமைத்துவ பிரிவினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் அனர்த்தங்கள் காரணமாக மக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைக் கருத்தில் கொண்டு மாவட்டங்களுக்கு நீதி விடுவிக்கப்படும்.

இதன் நிதி முன்னேற்றமானது 83% ஆகவும் பௌதிக முன்னேற்றம் ஆனது 46% ஆகவும் பதியப்பட்டுள்ளன.

அட்டவணை 4.1: மாவட்டங்களுக்கு இடையில் நிதியை பகிர்ந்தளித்தலும் செலவினை மேற்கொள்ளுதலும் 2019-2021

ஆண்டு	பொதுத்திறைசேரியிடமிருந்து அங்கீகரிக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு (ரூ.மி)	செலவு (ரூ.மி)
2019	18.0	16.8
2020	5.50	4.54
2021	7.50	6.25

மாவட்ட பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் இடர் முகாமைத்துவத்தை வலுவூட்டல் செய்வதற்காக முன்னாயத்த திட்ட நடவடிக்கைகளுக்காக 2021 ஆம் ஆண்டில் முன்னாயத்த திட்டமிடல் பிரிவினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவ திட்டங்களை அச்சிட்டு தயார்செய்து மீளாய்வு செய்வதற்கான பங்குதாரர்களின் கூட்டம், செயலமர்வுகள் ஆகியவற்றுக்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் நிதி விடுவிக்கப்பட்டது.

சுனாமி, வெள்ளப்பெருக்கு, மற்றும் மண்சரிவு பற்றிய ஒத்திகை வேலைத்திட்டங்களையும் முன்னெடுத்தல், வரைபடங்களை தயார் செய்தல், அபாய நிலைமைகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் கிராமிய மட்டத்திலான இடர் முகாமைத்துவ குழுக்களை தாபித்தல் போன்ற சமூக மட்டத்திலான இடர்களுக்கு பதிலிருக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுகள் உடைவதற்கான முன்கூட்டிய தீர்வாக அணைக்கட்டுக்களின் அருகாமையில் தாழ் நிலங்களில் வாழும் மக்களுக்கு அவசர நிலைமைகளின் போது பதிலிருப்பதற்காக மக்களுடைய பங்கேற்புடன் முன்னாயத்த திட்டங்களை நிர்மாணிப்பதற்கும் மாவட்ட முன்னேற்ற மீளாய்வு குழுக்களை நடத்துவதற்குமாக இப்பிரிவானது நிதி ஏற்பாட்டினை செய்கின்றது.

4.1.2 அனர்த்த முன்னாயத்தங்களுக்கான பதிலிருப்பு திட்டங்கள்

2021ஆம் ஆண்டில் பருவப் பெயர்ச்சி மழைக்கு பதிலிருப்பதற்காக கொழும்பு, நுவரெலியா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, மாத்தறை, மன்னார். யாழ்ப்பாணம், அம்பாறை மற்றும்

களுத்துறை ஆகிய மாவட்டங்களில் நிலவிய அனர்த்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு உரிய பங்காளி நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அனர்த்த நிலைமைகளின் போது மிகவும் சிறப்பாக பதிலிருப்பதற்காக இந்த பருவப் பெயர்ச்சி திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இதற்காக ரூ.317,720.00 செலவிடப்பட்டுள்ளது.

4.1.3 அனர்த்த அபாயம் மிக்க பிரதேசங்களில் விளம்பர பதாதைகளை பொருத்துதல்

மண்சரிவு வெள்ளம் மற்றும் சுனாமி போன்ற அழுத்தங்களுக்கு ஆளாகும் பிரதேசங்களில் வாழும் மக்களை அனர்த்தங்கள் தொடர்பில் அறிவுறுத்துவதாக விளம்பரப் பதாகைகள் பொருத்தப்பட்டுள்ளன. மாத்தறை, அம்பாந்தோட்டை, கேகாலை, பதுளை, அனுராதபுரம், யாழ்ப்பாணம், களுத்தறை, மாத்தளை, மாத்தறை, கம்பஹ மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் இந்த அபாயம் மிக்க பிரதேசங்களில் 2021ஆம் ஆண்டில் 250 விளம்பரப் பதாகைகள் பொருத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 4.2: 2021ஆம் ஆண்டில் பொருத்தப்பட்டுள்ள விளம்பர பதாகைகள் பற்றிய விபரங்கள்

இலக்கம்	மாவட்டம்	ஒதுக்கப்பட்டுள்ள தொகை	பூர்த்திசெய்யப்பட்டுள்ள தொகை	செலவு
1	மாத்தளை	20	22	160,600.00
2	மன்னார்	15	15	132,750.00
3	கேகாலை	20	80	739,000.00
4	பதுள்ளை	20	20	90,000.00
5	அநுராதபுரம்	15	15	135,000.00
6	அம்பாந்தோட்டை	10	33	381,000.00
7	களுத்துறை	20	8	76,800.00
8	கம்பஹ	20	20	200,000.00
9	யாழ்ப்பாணம்	10	25	284,350.00
10	மாத்தறை	10	12	133,500.00
மொத்தம்			**250**	**2,333,000.00**



அறிவிப்பு பலகைகளை நிறுவுதல் – அம்பாந்தோட்டை மாவட்டம்



அறிவிப்பு பலகைகளை நிறுவுதல் – அனுராதபுரம் மாவட்டம்

2013 முதல் 2021 வரையில் 25 மாவட்டங்களில் அனர்த்த அபாயத்தை தணிப்பதற்காக பொருத்தப்பட்டுள்ள அபாய குறித்த பதாதைகள் பற்றிய விபரம் பின்வருமாறாகும்.

நீரில் முழ்கும் அபாயத்தை வெளிப்படுத்தும் பதாதைகள்	572
சுனாமி அபாய அறிவித்தல் பதாதைகள்	175
மண்சரிவ அபாய எச்சரிக்கை பதாதைகள்	314
வெள்ள அபாய எச்சரிக்கை பதாதைகள்	58

4.1.4 பருவப் பெயர்ச்சி முன்னாயத்த வேலைத்திட்டங்கள் - தேசிய மாவட்ட மற்றும் பிரதேச

தென்மேற்கு மற்றும் வடமேல் பருவப் பெயர்ச்சியினால் பாதிக்கப்படும் மாவட்டங்களைச் சார்ந்த செயலாளர்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னாயத்த செயற்பாடுகளாக அபாய முன்னறிவித்தல் செயன்முறை அவசர தரித்து வைத்தல் குழுக்களை உரிய இடங்களுக்கு அனுப்புதல் நிவாரண சேவை நடவடிக்கைகள் மற்றும் முகாம் முகாமைத்துவம் தொடர்பில் கலந்தாலோசிக்கப்படுகின்றன. இதன் மூலம் ஏற்படக்கூடிய உயிர் சேதம் மற்றும் சொத்துக்கள் மீதான சேதங்களை குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த வேலைத் திட்டத்தின் மூலம் நாட்டில் வருடாந்தம் ஏற்படும் தென்மேற்கு மற்றும் வட மேல் பருவப் பெயர்ச்சி காலகட்டத்தில் நாட்டைப் பாதிக்கும் அதிகூடிய மழைவீழ்ச்சி கடும் காற்று நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இதனால் பாதிக்கப்படும் மாவட்டங்களில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக்களை கூட்டி ஏற்படக் கூடிய நிலைமைகளுக்காக (வெள்ளம். மண்சரிவு, கடும் புயல்) உரிய மாவட்டங்களை தயார் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான தென்மேற்கு பருவப் பெயர்ச்சிக் முகம் கொடுப்பதற்கான திட்டங்கள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகினால் (11 அலகுகள்) தயார் செய்யப்பட்டுள்ளன. அவசர பதில் இருப்புக்காக தயாராக தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்பு அலகுகள் மற்றும் மாவட்ட செயலாளருக்கு தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. 2021 மே 04ஆந் திகதி தேசிய தொழில்நுட்ப முகவர் நிறுவனங்களின் பங்கேற்புடன் பங்குதாரர்களின் கூட்டமானது ஒன்லைன் முறையில் (ZOOM) வசதியைப் பயன்படுத்தி இணையத்தளத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டது. 2021 மே 22ஆந் திகதி ஊடக நிறுவனங்கள் மற்றும் ஆட்களை அறிவுறுத்துவதற்காக ஒன்லைன் ஊடக சந்திப்பு நடத்தப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ சுற்றறிக்கையில் தென்மேற்கு பருவப்பெயர்ச்சி காலப்பகுதியில் பதிலிருப்பதற்கான தயார் நிலை தொடர்பில் 2021 மே 01/2021 ஆந் திகதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டு 11 மாவட்டங்களை சேர்ந்த மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



ஊடக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தல்



சர்வதேசரீதியில் பங்குதாரர்களை அறிவுறுத்துதல்

2021ஆம் ஆண்டு உலக உணவு அமைப்பின் உதவியுடன் தென் மேற்கு மற்றும் வட மேல் பருவப் பெயர்ச்சி உடன் ஏற்படக்கூடிய மழை காரணமாக நிகழும் அரத்த நிலைமைகளுக்கு பதில் இருப்பதற்காக இதனால் பாதிக்கப்படும் மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்ஆயத்த திட்டங்கள் தயார் செய்யப்பட்டுகின்றன. COVID 19 பெரும் தொற்று காரணமாக நாட்டினுள் ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் கருத்தில் கொள்ளுதல் சுகாதார அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு இசைந்தொழுகுதல் தகுந்த முன்னாயத்தம் திட்டமிடல் நடவடிக்கைகள் மற்றும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகியன சவால் மிக்க பணிகளாகும். மாவட்ட மட்டத்தில் மாவட்ட செயலாளரது தலைமையில் 18 மாவட்ட முன்னாயத்த கூட்டங்களும் 88 பிரதேச முன்னாயத்த கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 4.3: மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட முன்னாயத்த கூட்டங்கள் 2021

இலக்கம்	மாவட்டம்	ஒதுக்கப்பட்டுள்ள தொகை	பூர்த்தி செய்யப்பட்டுள்ள தொகை	பிரதேச செயலகப் பிரிவுகள்	செலவு
1	கொழும்பு	2	2	கொழும்பு	39,940.00
				கொலன்னாவை	39,940.00
2	காலி	1	1	நெலுவ	29,970.00
3	கம்பஹ	3	1	ஜா - எல	31,250.00
			1	கம்பஹ	31,250.00
			1	நீர்கொழம்பு	31,250.00
4	கேகாலை	3	1	புலத்கொஹுபிட்டிய	38,580.00
5	இரத்தினபுரி	3	1	குருவிட்ட	38,250.00
6	குருநாகல்	4	2	ரிதீகம	40,000.00
				கிரிபாவ	40,000.00
7	பொலன்னறுவ	3	1	வெலிகந்த	35,000.00
			1	தமன்கடுவை	35,000.00
8	அம்பாறை	3	1	சம்மாந்துறை	39,970.00

9	யாழ்ப்பாணம்	1	1	உடுவில்	39,515.00
10	முல்லைத்தீவு	1	1	ஒட்டுசுடான்	16,950.00
11	களுத்துறை	3	1	புலத்சிங்கள	40,000.00
			1	பதுரலிய	40,000.00
12	வவுனியா	2	1	வவுனியா	32,345.00
மொத்தம்		**18**			**639,210.00**

கொழும்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம் கொழும்பு மாவட்ட செயலக அலுவலகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மேஜர் பிரதிப் உதுகொட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வுபெற்ற ஜெனரல் சுதந்த ரணசிங்க மற்றும் மாவட்ட செயலாளரது தலைமையில் கடந்த தினம் இடம்பெற்றது.



மாவட்ட செயலாளர் தலைமையில் பங்காளி நிறுவனங்களின் பங்கேற்புடன் நுவரெலிய மாவட்ட அனர்த்த முன்னாயத்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கடந்த தினம் நுவரெலியா மாவட்ட செயலக அலுவலகத்தில் இடம்பெற்றது.



கடந்த தினங்களில் நுவரெலியா மாவட்டத்தில் நிலவிய பாதகமான காலநிலை காரணமாக இடம்பெற்ற வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களை தணிப்பதிலான சிக்கல்கள் குறித்தும் இவற்றுக்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் நுவரெலியா நகர மேயர் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் நுவரெலிய நகரத்திலும் அதற்கு அண்மித்த பிரதேசங்களிலும் சேதமடைந்துள்ள வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை

புனரமைக்கும் செயன்முறையினை துரிதப்படுத்தும் நோக்கில் கள அவதானிப்பு விஜயத்தினை 2021.11.12ஆந் திகதி மேற்கொண்டனர்.



மனிதநேயம் மிக்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் அனர்த்த பதில் இருப்புக்கான பங்களிப்பு

சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகள் (INGOs), பிரதேச அரசு சார்பற்ற அமைப்புகள் (NGOs) மற்றும் ஏனைய தொண்டர் நிறுவனங்களினால் அனர்த்த முகாமைத்துவம் நிலையத்துடனான (DMC) ஒருங்கிணைப்புடன் முன்னெடுக்கப்பட்டுள்ள பதில் இருப்பு செயற்பாடுகள் ஊடாக துரித தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களுக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட பல்வேறு மனிதநேயமிக்க நிறுவனங்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பொருட்கள் பிரத்தியேக பாதுகாப்பு உபகரணங்கள் (PPE), கர்ப்பிணிப் பெண்களுக்கான பொருட் தொகுதி, வொஷ் பேசின் உள்ளிட்ட பொருட்கள் பண்டங்களையும் மேலும் சில அரசு சார்பற்ற அமைப்புகள் உலர் உணவு சமைத்து உணவு ஆகியவற்றையும் பகிர்ந்தளிப்பதில் பங்கேற்றன.



உலக உணவு அமைப்பு பிரத்தியேக பாதுகாப்பு பொதியை வழங்குதல்



ஐ.அமெரிக்க தூதுவராலயத்தினால் பிரத்தியேக பாதுகாப்பு பொதிகளை வழங்குதல்



கர்ப்பிணிகளுக்கான பொதிகள் மற்றும் துப்பரவேற்பாட்டு பொதியை வழங்குதல்

4.1.5 பாடசாலை அனர்த்த முன்னாயத்த திட்டங்களை தயார் செய்தல்

கல்வி அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் இணைந்து அனர்த்த அபாயம் நிலவும் பிரதேசங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன. 2021ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை அம்பாறை யாழ்ப்பாணம் மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் சுனாமி அர்த்தத்துக்கு இலக்காகும் 10 பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து இப்பாடசாலைக்கான அனர்த்த வரைபடங்களை தயார் செய்தல் அனர்த்தம் குறித்து விழிப்புணர்வூட்டுதல் மற்றும் ஒத்திகை நிகழ்ச்சிகளை நடாத்துதல் இதன் நோக்கமாகும்.

4.1.6 வைத்தியசாலை முன்னாயத்த வேலைத்திட்டங்களை நடாத்துதல்.

வைத்தியசாலை அவசர அனர்த்த முன்னாயத்த திட்டங்களைத் தயாரித்து இதன் பிரதான நோக்கம் வைத்தியசாலை ஊழியர்களது பாதுகாப்பு நோயாளர்களது பாதுகாப்பு அவசர அனைத்து நிலைமைகளின் போது வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்தல் மற்றும் அவற்றுக்கு பதிலிருப்பதற்கான திட்டங்களை தயார் செய்வதாகும். இந்த வேலைத் திட்டத்தில் வைத்தியசாலை மற்றும் அண்மித்த பிரதேசங்களில் இயற்கை அனர்த்தங்களை அடையாளம் கண்டு அவற்றை வரைபடமாக்கி அதற்கேற்ப குறிப்பிட்ட அனர்த்தத்தை தணிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல் விழிப்புணர்வூட்டுதல் மற்றும் முன்னாயத்த வேலைத்திட்டங்களை நடாத்துதல் குறித்த தகவல்களை உள்ளடக்கிய திட்டங்கள் தயார் செய்யப்படுகின்றன. இந்த வேலைத் திட்டங்களின் கீழ் 2021ஆம் ஆண்டில் பதுளை மாவட்டத்தில் 05 வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதற்கு ரூ.109,450.00 செலவு ஏற்பட்டுள்ளது.


அட்டவணை 4.4: வைத்தியசாலை முன்னாயத்த வேலைத்திட்டங்கள் - 2021

	மாவட்டம்	ஒதக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை	பூர்த்தி செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை	இடங்கள்	திகதி	செலவு	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை
1	பதுளை	5	5	பிரதேச செயலகப் பிரிவுகள்	2021/3/29	109,450.00	60
மொத்தம்						**109,450.00**	

4.1.7 தேசிய சுனாமி ஒத்திகை வேலைத்திட்டம் - IOWave 20

கடந்த 2011 ஆம் ஆண்டு மாசி மாதம் 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் இந்து சமுத்திர சுனாமி முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பிற்கான நிலையம் இந்தியாவின் ஐதராபத்தில் கூட்டம் ஒன்றை நடாத்தியது. இந்திய சமுத்திர சுனாமி முன்னெச்சரிக்கை நிலையத்தின் சுனாமி சேவை வழங்கினரிற்கும் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை நிலையத்திற்கும் இடையில் உள்ள தொடற்சியான சுனாமி பற்றிய தொடர்பாடல் பரிசோதிக்கப்பட வேண்டம் என அக் கூட்டத்தில் திர்மானிக்கப்பட்டது. IOTWMS இனுடைய குழு2 சுனாமி அதிர்வு மற்றும் முன்னெச்சரிக்கை வழங்குதலின் 22 ஆவது முன்னெச்சரிக்கை தொடர்பாடல் பரிசோதனையானது 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் 23 ஆவது பரிசோதனையானது 2021 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது. தேசிய சுனாமி முன்னெச்சரிகை நிலையம் தொடர்பாக வளிமண்டல திணைக்களத்தினால் இப் பரிசோதனையானது தெரிவு செய்யப்பட்ட ஊடகங்களினுடாக (fax, SMS. Email…) முன்னெச்சரிக்கை தகவல்கள் அனுப்பப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. IOTWMS அனுடைய சுனாமி முன்னெச்சரிக்கை சேவை வழங்குளரினால் நான்கு வகையான சுனாமி முன்னெச்சரிக்கை தகவல்கள் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை நிலையத்திற்கு வழங்கப்பட்டு மீள அது தொடர்பான அறிக்கை தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை நிலையத்திற்கு அனுப்பப்பட்டது.

எதிர்கால முன்னேற்றம் மற்றும் தகல்களை வழங்குதலில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்யும் நோக்குடன் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தேசிய சுனாமி முன்னெச்சரிக்கை நிலையத்திற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கு அமைய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அவசர நடவக்கை பிரிவிற்கு சுனாமி முன்னெச்சரிக்கை தகவல்கள் அனுப்பப்பட்டு தகவல் பரிமாற்றம், மற்றும் முன்னெச்சரிக்கை தகவல்களை அனுப்புதலில் உள்ள இடையூறுகள் போன்றனவும் பரிசோதிக்கப்பட்டது.




மேலும் சுனாமி அபாய அறிவிப்பு மற்றும் பதிலிருப்பு பொறிமுறையினை கிராமிய மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் பிரயோக சிரமங்கள் குறித்தும் தற்போதைய கொவிட் 19 பெருந்தொற்றினைக் கருத்தில்கொண்டு கடைப்பிடிக்க வேண்டிய விசேட சுகாதார பாதுகாப்பு முறைகள் உள்ளிட்ட சுனாமி முன்னாயத்தம் மற்றும் திட்டமிட சுனாமி முன்னாயத்த வேலைத்திட்டங்கள் பதிலிருப்பு பொறிமுறையை பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்களையும் மேம்படுத்தல் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

4.1.8 காற்றின் வேகத்தை அனுமானித்தல் தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் சுவரொட்டிகள

போபட் அளவுகோலுக்கு ஏற்ப உள்ளக மற்றும் கரையோரத்தை அண்மித்ததாக காற்றின் வேகம் காரணமாக ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பில் அபாய முன்னறிவிப்பு தொடர்பிலான விழிப்புணர்வூட்டும் சுவரொட்டிகள் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்கான தொழில்நுட்ப உதவியானது JICA மற்றும் வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி உதவியானது ADPC நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளது.





4.1.9 பாதுகாப்பு நிலையங்களுக்கான மடிப்பு கட்டில் களை பகிர்ந்தளித்தல்

அவசரத் தேவையாக தென்மேற்கு பருவப் பெயர்ச்சி தாக்கத்துக்கு உட்படும் மாவட்டங்களில் உள்ள பாதுகாப்பு நிலையங்களுக்கு உலக வங்கியின் நிதி உதவியுடன் 1000 கள கட்டில்கள் (Foldable bed) மெத்தையுடன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதற்காக உலக வங்கியானது ரூ. 11.87 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் கட்டில்கள் மாவட்டங்களில் நிலவும் அனர்த்தங்கள் மற்றும் பாதுகாப்பு நிலையங்களில் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்டங்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

4.1.10 முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் தலைமையில் 2021.07.26 மற்றும் 2021.11.01 ஆகிய இரு தினங்களிலும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் முல்லைத்தீவு கிளிநொச்சி வவுனியா திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை மன்னார் மொணராகலை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களுடன் 2021.01.26ஆந் ஒன்லைன் வழிமுறையில் (Zoom) மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மேலும் 2021.01.27ஆந் திகதி அனுராதபுரம் கொழும்பு பதுளை அம்பாந்தோட்டை களுத்துறை கண்டி கேகாலை குருநாகல் மாத்தளை நுவரெலியா பொலன்னறுவை புத்தளம் மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் ஒன்லைன் வழிமுறையில் (Zoom) மாவட்ட முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதன.





4.1.11 தற்போதைய அனர்த்த நிலைமையில் நிவாரணம் வழங்குதல் பற்றிய கலந்துரையாடல்

தற்போதைய அனர்த்த நிலைமை யில் நிவாரணம் வழங்குதல் குறித்த கலந்துரையாடல் அமைச்சர்கள் தலைமையில் 2021.11.16ஆந் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் இடம் பெற்றது. இதன்போது உலகளாவிய ரீதியில் இடம்பெறுள்ள காலநிலை மாற்றங்கள் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் குறித்தும் இதனால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் மற்றும் பிரதேசங்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் குறித்தும் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் பேச்சுவார்த்தையின் மேற்கொள்ளும் முகமாக இக் கலந்துரையாடல் இடம் பெற்றது.இக்கலந்துரையாடலில் கௌரவ பிரதம அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் நிறுவனத் தலைவர்கள் பங்கேற்றனர்.

4.2 பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவு


அனர்த்த முகாமைத்துவ செயன்முறையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாக அமைவது யாதெனில் அனர்த்தங்கள் குறித்தும் அனர்த்த முகாமைத்துவ செயன்முறைகள் குறித்தும் அனர்த்தங்கள் தொடர்பில் பொதுமக்களை தயார்படுத்துதல் குறித்தும் இதில் பொதுமக்களது பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்காக அவர்களுக்கு அறிவு புரிந்துணர்வு மற்றும் அனுபவங்களை வழங்கக்கூடிய முறையில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள் துண்டுப்பிரசுரங்கள் சுவரொட்டிகள் விளம்பரப் பதாகைகள் கண்காட்சிகள் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் மூலமாக பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல் ஆகிய செயற்பாடுகள் ஊடாக நாட்டுமக்களுக்கு விழிப்புணர்வூட்டி ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைகளை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்தவாறு பொது மக்களுடைய உயிர்வாழ்க்கை மற்றும் சொத்துக்களை பாதுகாத்தல் ஆகும். தற்போது நிலவும் பூகோள வெப்ப நிலை காலநிலை மாற்றங்கள் சனத்தொகை வளர்ச்சி முறையற்ற அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் பல்வேறுபட்ட இயற்கை ரீதியான மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக அனர்த்தங்கள் ஏற்பட்டு உயிர் இழப்புக்கள் மற்றும் சொத்து இழப்புக்கள என்பன அதிகரித்து வருகின்றது. இத்தகைய சூழ்நிலையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் அடைவதும் பாரிய தடையாக அமைந்துள்ளது. ஆகவே நாட்டில் அனைத்து பிரதேசங்களையும் உள்ளீர்க்கும் முறையில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள் 2021ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டிருந்தன.2021ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் 19 பெரும் தொற்று காரணமாக சுகாதார அமைச்சினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்பட்ட சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் காரணமாக 2021ஆம் ஆண்டின் ஒரு திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களை அவ்வாறே முன்னெடுக்க முடியவில்லை.

விழிப்புணர்வூட்டல் மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்களை பொதுமக்களின் பங்கேற்புடன் மேற்கொள்ள வேண்டுமாகையால் மேற்குறிப்பிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்களுக்கு ஏற்ப மக்களை ஒன்று கூட்டி வேலைத்திட்டங்களை நடாத்த முடியவில்லை. எவ்வாறெனினும் 2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 பெருந்தொற்று தொடர்பிலான சட்ட திட்டங்கள் தளர்த்தப்பட்ட போது மட்டுப்படுத்தப்பட்ட மக்களுடைய பங்கேற்புடன் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன் இதற்காக சுமார் ரூ.9.4 மில்லியன் செலவில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு கல்வி திட்டங்கள் மாத்திரம் 197 முன்னெடுக்கப்பட்டதுடன் இதில் நேரடி பயனாளிகளாக 11,530பேர் பங்கேற்றனர். இதற்கேற்ப தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் பற்றிய விபரம் பின்வருமாறாகும்.

4.2.1 தேசிய மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

அனர்த்தம் குறித்து பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துவதாக புத்தகங்களை அச்சிடுதல் நாட்டில் காணப்படும் அனர்த்த அபாய செயன்முறை குறிப்பு பாடசாலை மாணவர்களது அறிவு மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்தும் முகமாக் சுனாமி பூமியதிர்ச்சி முதலுதவி இடி மின்னல் மண்சரிவு மற்றும் வறட்சி ஆகிய அனர்த்த நிலைமைகள் தொடர்பில் ஒரு புத்தகம் வீதம் மேலும் பல புத்தகங்களை உள்ளடக்கிய புத்தகப் பொதியினை தயார் செய்து அச்சிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இப்புத்தக பொதிகளை 2010ஆம் ஆண்டில் அச்சிட்டு சகல பாடசாலைகளிலும் நூலகங்களுக்கு வழங்குவதற்கான

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பாடசாலை சமூகத்தின் கோரிக்கைக்கு ஏற்ப உலக உணவு வேலைத்திட்டத்தின் நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி 2021ஆம் ஆண்டில் 500 புத்தக பொதிகள் அச்சிடப்பட்டுள்ளன.



அனர்த்த முகாமைத்துவம் குறித்த அச்சிடப்பட்டுள்ள புத்தகங்கள்

4.2.2 கண்காட்சிகளின் ஊடாக பொது மக்களையும் பாடசாலை மாணவர்களையும் அறிவுறுத்துத்துவதற்காக கண்காட்சி தொகுதிகளை தயார் செய்தல்

தேசிய மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்திலும் பாடசாலைகளில் இடம் பெறுகின்ற பல்வேறு கண்காட்சிகளை பாவிப்பதற்கும் 07 கண்காட்சி தொகுதிகள் 2021ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்டுள்ளன. இக்கண்காட்சி தொகுதிகள் மூலம் அனர்த்தங்கள் குறித்தும் அனர்த்த முகாமைத்துவ பொறிமுறை குறித்தும் பொதுமக்கள் செயற்பட வேண்டிய விதம் குறித்தும் மிகவும் இலகுவாக படங்கள் சகிதம் சரியான புரிந்துணர்வினை வழங்கி பொதுமக்களை முகாமைத்துவ செயல்முறைக்கு தயார் செய்வதிலும் அவர்களது உயிர்வாழ்க்கை மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.


அட்டவணை 4.5: 2021ஆம் ஆண்டில் கண்காட்சி தொகுதிகள் வழங்கப்பட்டுள்ள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் மற்றும் கருவிகள் பற்றிய விபரம்

மாவட்டம்	விடயம்						
	இலகுவில் கையாளக்கூடிய பிரதான பெயர்ப் பலகைகள்	மேலே கீழே மடிக்கக்கூடிய பெயரப் பலகைகள்	கண்காட்சி கருமபிடங்கள்	மடிக்கக்கூடிய கதிரைகள்	சுனாமி கம்பத்தின் மாதிரிகள்	மின் விசிறிகள்	காபட்
கொழும்பு	01	03	01	02	01	01	01
களுத்துறை	01	03	01	02	01	01	01
அம்பாறை	01	03	01	02	01	01	01
மன்னார்	01	03	01	02	01	01	01

வவுனியா	01	03	01	02	01	01	01
நுவரெலியா	01	03	01	02	01	01	01
முல்லைத்தீவு	01	03	01	02	01	01	01
மொத்தம்	**07**	**21**	**07**	**14**	**07**	**07**	**07**







இலகுவில் கையாளக்கூடிய பிரதான பெயர்ப்பலகைகள், மேலே கீழே மடிக்கக்கூடிய பெயர்ப்பலகைகள்ஈ

4.2.3 அனர்த்த முகாமைத்துவ செய்யும் முறை தொடர்பிலான உலகளாவிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக பதாதைகளை தயார்செய்தல்

பூகோள வெப்ப நிலை வானிலை மற்றும் காலநிலை மாற்றங்களும் ஏனைய இயற்கை மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக உலகளாவிய ரீதியில் பல்வேறு அனர்த்தங்கள் தீவிரமடைந்து வருவதுடன் தேசிய நிலைமைகளை முகாமைத்துவம் செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் அமைப்பின் கீழ் முன்னெடுக்கப்படும் உலகளாவிய வேலை திட்டங்களான அனர்த்த அபாயத்தை குறைப்பதற்கான சென்றாய் சட்டம் 2015-2030 (Sendai Framework for Disaster Risk Reduction 2015-2030) மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகள் (Sustainable Development Goals) ஆகிய வேலைத்திட்டங்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்படும் இரு வேலைத்திட்டங்கள் என்பதுடன் இந்த இரு வேலைத்திட்டங்களின் செயன்முறையில் உலகளாவிய ரீதியிலும் வலய ரீதியிலும் தேசிய மட்டத்திலும் அனர்த்த அபாய செயன்முறையில் பங்களிப்பு நல்கும் இரு வேலைத்திட்டங்களினதும் கருமம் ஆற்றல் செயன்முறை பதாதைகளை தயார்செய்து அவை மாவட்ட அலுவலகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டன.



4.2.4 வள நிலையங்களுக்கான (நூலகங்கள்) புத்தகங்களை கொள்வனவு செய்தல்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் தாபிக்கப்பட்டுள்ள வள நிலையங்களுக்காக (நூலகங்கள்) 2021ஆம் ஆண்டு ரூ. 641,571.00 பெறுமதியான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான புதிய அறிவினைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு புத்தகங்கள் மற்றும் கண்காட்சி நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய சிங்கள மொழி மூலம் 585 புத்தகங்களும் ஆங்கில மொழி மூலம் 22 புத்தகங்களும் 24 மாதாந்த சஞ்சிகை களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வள நிலையங்களில் (நூலகங்களில்) கலாநிதி பட்டதாரி மாணவர்கள் பட்டப்பின் படிப்பு மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றவர்கள் வள நிலையத்தை பயன்படுத்துவதுடன் இதற்குத் தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

4.2.5 பங்காளி நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை தேசிய மட்டத்தில் பயிற்றுவித்தல்

அனர்த்த முகாமைத்துவ செயன் முறையானது தனித்து மேற்கொள்ளப்படும் ஒரு செயல்முறை அல்ல என்பதுடன் இது தொடர்பில் நாட்டில் காணப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப பல்வேறு அமைச்சுக்கள் திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் முப்படையினர் பொலீசார் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் மீதும் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய அனர்த்த முகாமைத்துவ செயன்முறையின் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன குறிப்பிட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு அறிவு புரிந்துணர்வு மற்றும் அனுபவங்களையே வழங்குவதற்காக 2021ஆம் ஆண்டிலும் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கமைய இந்த வேலைத் திட்டங்கள் பற்றிய விபரம் பின்வருமாறு ஆகும்.

அட்டவணை 4.6: 2021ஆம் ஆண்டிலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள்

தொடர் இலக்கம்	இலக்கு குழு / விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள்	பங்கேற்றவர்களின் எண்ணிக்கை
01	இலங்கை தரைப்படை உத்தியோகத்தர்களுக்கன விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள்	135
02	இலங்கை தரைப்படை உத்தியோகத்தர்களுக்கன விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள்	65
03	இலங்கை தரைப்படை உத்தியோகத்தர்களுக்கன வேலைத்திட்டங்கள்(கம்பலை இராணுவ பயிற்சி கல்லூரி)	160
04	முப்படையினர், பொலிஸார் மற்றும் ஏனைய தொழிநுட்ப நிறுவன உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள் 9 (“Boots on Ground” ஒருங்கிணைந்த பயிற்சி ஒத்திகை வேலைத்திட்டம்)	20
05	இலங்கை விமானப்படையினருக்கான விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள்(மொரவெவ விமானப்படையினர்)	35
06	இலங்கை தரைப்படை அனர்த்த பயிற்சி நிலைய உத்தியோகத்தர்களுக்கான (கம்பளை) அவசர கருமமாற்றல் கூடங்களை அவதானிக்கும் விஜயங்கள் பற்றியது	136
	மொத்தம்	**551**




அனர்த்த அபாய முகாமைத்துவம் குறித்து இலங்கை தரைப்படையினரை அறிவுறுத்தும் வேலைத்திடம்

4.2.6 அனர்த்த அபாய முகாமைத்துவம் பற்றிய கொள்திறன் விருத்தி பயிற்சி வேலைத்திட்டம்

மாவட்ட மட்டத்தில் அவசர அனர்த்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள முப்படையினர் பொலீசார் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகளுக்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் 04 நாள் வதிவிட பயிற்சி கெட்ட முன்னெடுக்கப்பட்டதுடன் இதன்போது கோட்பாட்டு ரீதியான மற்றும் நடைமுறை ரீதியான அறிவு புரிந்துணர்வு மற்றும் அனுபவங்களையும் வழங்க முடிந்ததுடன் இதன் மூலம் மாவட்ட மட்டத்தில் அனர்த்த நிலைமை முகாமைத்துவத்தை வினைத்திறன் மிக்க தாக்குவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது.




அனர்த்த அபாய முகாமைத்துவம் பற்றிய கொள்திறன் விருத்தி பயிற்சி வேலைத்திட்டம்

4.2.7 பாடசாலை பாட விதானத்தில் வெளிவாரி செயற்பாடுகளில் அனர்த்த அபாய முகாமைத்துவத்தை உள்ளீர்க்கும் தேசிய வேலைத்திட்டம்

தற்போது பல்வேறுபட்ட இயற்கை மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக இடம் பெறும் அனர்த்தங்களின் அபாய நிலைமை தீவிரமடைந்து வருவதுடன் ஏற்படும் உயிரிழப்புக்களும் சொத்து இழப்புக்களும் அதிகரித்து வருகின்றன. மேலும் அனர்த்தங்களின் தன்மையும் சிக்கல் அடைந்து வருகின்றது. இந்த நிலைமைகளுக்கு முகம் கொடுப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையமானது நாட்டின் பல்வேறு குழுக்களின் பங்கேற்புடன் பொதுமக்களின் உயிர் வாழ்க்கை மற்றும் சொத்துக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்கின்றது.

கல்வி அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையம், இலங்கை ஆடவர் சாரணர் சங்கம், இலங்கை மகளீர் சாரணர் சங்கம், தேசிய இளைஞர் அணி ஆகிய 04 நிறுவனங்களும் ஒருங்கிணைந்து அனர்த்த முகாமைத்துவ செயன் முறையினை பாடசாலை பாட விதானத்தில் உள்ளீர்ப்பதற்காகவும் தேசிய சாரணர் சங்கம், இலங்கை மகளீர் சாரணர் சங்கம் மற்றும் இலங்கை தேசிய இளைஞர் அணியின் மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் ஈடுபடுகின்ற சகல உத்தியோகத்தர்களையும் அனர்த்த முகாமைத்துவ செயல்முறை தொடர்பில் பயிற்றுவித்து அவர்களை அனர்த்த முகாமைத்துவ செயன்முறையில் முனைப்பாக பங்களிப்பு நல்கும் குழுவாக செயற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை 2021ஆம் ஆண்டில் ஆரம்பித்து முன்னெடுத்துள்ளது.

4.2.8 பல்கரும அபிவிருத்தி செயலணியினால் குறைந்த வருமானம் பெறும் 100,000 பேருக்கு வாழ்க்கை தொழில் பயிற்சியை வழங்கும் தேசிய வேலைத்திட்டம்

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை திட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ள பல்கரும அபிவிருத்தி செயலணியில் அனர்த்த அபாயம் முகாமைத்துவ செயல்முறைகள் தெரிவு செய்யப்பட்டுள்ள உதவியாளர்களை பயிற்றுவிப்பதற்காக 2020ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்டுள்ள பயிற்சி மாதிரிக்கு அமைய 2021ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் குறிப்பிட்ட பயிற்சி பெற தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட பயிற்சி வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சி வேலைத்திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டதுடன் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகானது இந்த வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்து உடன் மேலும் திட்டங்களுக்கு தேவையான

இணைய வசதிகளும் ஆலோசனைகளும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் விழிப்புணர்வூட்டல் பிரிவினால் வழங்கப்பட்டுள்ளன.



தாதி உதவியாளர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ பயிற்சி - அம்பாந்தோட்டை மாவட்டம்

4.2.9 ஊடகப் பேச்சுவார்த்தைகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டங்கள்

அனர்த்த முகாமைத்துவ செயன்முறையில் அனர்த்த அபாய நிலைமைகள் பற்றிய சகல தரவுகளையும் பொது மக்களிடம் கொண்டு சேர்க்கும் முக்கிய ஊடகம் பொதுசன ஊடகம் ஆகும். அனர்த்த முகாமைத்துவ நிலையமானது இதற்காக ஊடகவியலாளர்களை பயிற்றுவித்தல் விழிப்புணர்வு ஊட்டுதல் மற்றும் ஊடக கலந்துரையாடல்களை அடிக்கடி முன்னெடுக்கின்றது. இக் கலந்துரையாடல்கள் அவசர அனர்த்த நிலைமை முகாமைத்துவ செயன்முறையில் பங்களிப்பு நல்கும் பிரதான பங்காளி நிறுவனங்களின் தலைவர்கள் அல்லது குறிப்பிட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் மேற்கொள்ளப்படுவதுடன் இதன் போது ஏற்படக்கூடிய இந்த அனைத்து நிலைமைகளுக்கான முன்னாயத்தம் தொடர்பிலும் நீண்ட கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.



ஊடக பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தல்

4.2.10 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இணையத்தளம் மற்றும் சமூக வலைத்தளங்கள் ஊடாக பொதுமக்களுக்கு தகவல்களை தெரிவித்தல்

அனர்த்தங்கள் பற்றிய முன்னறிவித்தல் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்துதல் தொடர்பிலான முன்னறிவித்தல் மற்றும் தரவேற்றப்பட்ட தகவல்கள் முகாமைத்துவ நிலையத்தின் இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக பிரபல்யமான

சமூக வலைத்தளங்களில் ஊடாக விழிப்புணர்வுடன் பிரிவின்கீழ் இயங்கும் ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. முக்கியமாக அவசர அழைப்பு நிலைமையின் போது தரவுகள் மற்றும் தகவல்களை துரிதமாக ஊடகங்களுக்கு வழங்குதல் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களை அறிவுறுத்துவதற்கு தேவையான தரவகளை இற்றைப்படுத்தல் நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது.

4.2.11 தேசிய பாதுகாப்பு தின வேலைத்திட்டங்கள்

2004ஆம் ஆண்டு சுனாமி பேரழிவின் போது எமது தாய் நாடானது 35,000 இற்கும் அதிகமான உயிர்களை இழந்ததுடன் பல பில்லியன் பெறுமதியான சொத்துக்களையும் இழந்தது.2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இலங்கையை தாக்கிய சுனாமி காரணமாக உயிரிழந்தவர்களிற்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நாடளாவிய சர்வ மத வேலைத்திட்டங்களும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்களும் டிசம்பர் 26ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தினத்தையொட்டி நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கமைய 2021ஆம் ஆண்டு இடம்பெற்ற சவால்களுக்கு மத்தியிலும் டிசம்பர் 26 ஆம் திகதி சுனாமி மற்றும் ஏனைய இடர்களினால் உயிரிழந்தவர்களை நினைவூட்டி புண்ணிய கருமங்களில் ஈடுபடும் முகமாக சர்வமத வேலைத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் வழங்கியவாறு 25 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளையும் மையமாகக்கொண்டு அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களது பங்கேற்புடன் சர்வமத அனு'டான நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இப்போது பாதுகாப்பு தின பிரதான நிகழ்ச்சியானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உத்தியோகத்தர்கள் முப்படையினர் பொலிஸார் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள து பங்கேற்பு ஹிக்கடுவ பரூலிய சுனாமி நினைவுத் தூபிக்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது.



பாதுகாப்பு தினக் கொண்டாட்டம் --ஹிக்கடுவை பெலியகொடை சுனாமி நினைவுத்தூபிக்கு அருகில்




தேசிய பாதுகாப்பு தினக் கொண்டாட்டங்கள் - அம்பாந்தொட்டை பஸ் தரிப்பு நிலையத்துக்கு அருகில் அம்பாந்தோட்டை, காலி

4.2.12 மாவட்ட மட்டத்திலான பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்கள்

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது அனர்த்த முகாமைத்துவ செயன்முறையினை வினைத்திறன் மிக்கதாக மேற்கொள்ளும் முகமாக அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலைகுகளை ஸ்தாபித்து இவற்றுக்குத் தேவையான மனித வளம் பௌதீக வளம் மற்றும் நிதி பலத்தை வழங்கியவாறு மாவட்டத்தின் சகல பங்காளி நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் சமூகத்தை ஒருங்கிணைத்தவாறு அனர்த்த முகாமைத்துவ செயன் முறையை நடைமுறைப் படுத்துகிறது.

மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு அலகுகள் மாவட்ட பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் கிராமிய மட்டத்திலான சகல பயிற்சி மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களையும் கையேடுகள் விளம்பரப் பதாகைகள் சுவரொட்டிகளை உருவாக்கி பகிர்ந்தளித்த வாறு மாவட்ட மட்டத்தில் ஊடக செயலமர்வுகள் உள்ளிட்ட சகல செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்றது. இந்த வருடம் மாவட்ட மட்டத்தில் 191 வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இதில் 10979பேர் பங்கேற்றுள்ளனர்.



சமூகத் தலைவர்களுக்காக களுத்துறை இராணுவ முகாமில் இடம்பெற்ற படகு ஓட்டுதல் பயிற்சி வேலைத்திட்டம் - களுத்துறை மாவட்டம்



நன்னடத்தை மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டம் - கண்டி மாவட்ட செயலக கேட்போர் கூடம் - கண்டி மாவட்டம்




பொலிஸாருக்கான அனர்த்த முகாமைத்துவம் பற்றிய அறிவுறுத்தல் வேலைத்திட்டம் - பதுளை மாவட்டம்




கமத்தொழில் திணைக்கள தொழிநுட்பவியலாளர்களுக்கான முன்னெடுக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவ விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டம் - கிளிநொச்சி கமத்தொழில் திணைக்களம்

4.2.13 கையேடுகளை அச்சிட்டு வழங்குதல்

இரத்தினபுரி மாவட்டமானது வருடாந்தம் வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்குமொரு மாவட்டமென்பதுடன், இதனால் பெருந்தொகையான மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள். அனர்த்தங்களுக்கு ஆளாகக் கூடிய மக்களை அடையாளம் கண்டு அனர்த்த நிலைமைகள் குறித்தும் இத்தகைய அனர்த்தங்களின்போது பதிலிருக்க வேண்டிய விதம் குறித்தும் மிகவும் இலகுவாக மக்களை அறிவுறுத்துவதற்காக கையேடுகள் தயார் செய்யப்பட்டு வீடு வீடாகச் சென்று வழங்கி வைக்கப்பட்டன.





இரத்தினபுரி மாவட்டத்துக்காக வடிவமைக்கப்பட்டள்ள துண்டுப் பிரசுரங்கள்

4.2.14 மாவட்ட மட்டத்தில் ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் வேலைத்திட்டங்கள்

அனர்த்த முகாமைத்துவ செயன்முறையில் முக்கிய பங்காளி நிறுவனமாக ஊடக நிறுவனம் செயல்படுவதன் காரணமாக தொடர்ச்சியாக ஊடகவியலாளர்களை அறிவுறுத்துதல் வேண்டும். இதற்கமைய 2021ஆம் ஆண்டு மாவட்ட ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் 03 செயலமர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது இது பற்றிய தரவுகள் பின்வருமாறாகும்.

அட்டவணை 4.7: 2021ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டுள்ள மாவட்ட ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் செயலமர்வுகள்

இலக்கம்	மாவட்டம்	பங்கேற்றுள்ள பிரதேச ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை
1	யாழ்ப்பாணம்	40
2	மொணறாகலை	35
3	அம்பாந்தோட்டை	60
மொத்தம்		135




மாவட்ட ஊடகவியலாளர்களை அறிவுறுத்தும் செயலமர்வுகள் - அம்பாந்தோட்டை மாவட்டம்

4.2.15 பணியாற் குழுவினருக்கான கொள்திறன் திறன் விருத்தி வேலைத்திட்டங்கள்

தற்போதுள்ள அனர்த்த அபாய நிலைமைகளையும் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய அனர்த்த அபாய நிலைமைகளையும் வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் முகாமைத்துவம் செய்து மக்களது வாழ்க்கையையும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் நவீன தொழில்நுட்ப அறிவுடன் கூடிய ஆற்றல் வளர்ச்சி அத்தியாவசியமாகிறது. இதற்கமைய் முகாமைத்துவ நிலையத்தினால் வருடாந்தம் பணியார் குழுவினரின் கொள்திறன் வளர்ச்சியை விருத்தி செய்வதற்கான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணியால் குழுவினரது கொள்திறன் விருத்தி வேலைத்திட்டங்கள் பற்றிய விபரம் பின்வருமாறாகும்.

அட்டவணை 4.8: அனர்த்த முகாமைத்துவ நிலைய பணியாட்குழுவினரின் கொள்திறன் விருத்தி வேலைத்திட்டங்கள் பற்றிய விபரம்

	வேலைத்திட்டம்	பங்கேற்ற வர்களின் எண்.
01	திறன் அபிவிருத்தி நிதியத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆவணக் கோப்பிடல் பற்றிய பயிற்சி வேலைத்திட்டம்	30
02	விடயம்சார் குறுங்கால் பாடநெறிகளில் பணியாட்குழுவினலை ஈடுபடுத்துதல்	03
03	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ள புதிய முப்படையினருக்கான அறிமுகப்படுத்தல் வேலைத்திட்டம்	07
04	பிரிட்டிஷ் கவுன்சிலினால் முன்னெடுக்கப்படும் ஆங்கில பாடநெறி	25
05	வினைத்திறன் தடைகாண் பரீட்சைக்கான நிதி ஏற்பாடுகளை வழங்குதல்	60
மொத்தம்		**125**



பிரிட்டிஷ் கவுன்சில் வளப்பங்ககளிப்பில் முன்னெடுக்கப்பட்ட ஆங்கில பாடனெறி

4.3 தணித்தல் ஆரர்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு

பொதுத் திறைசேரியின் பின்வருமாறு 2021ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாடானது தணித்தல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் தணித்தல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவினால் அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது அனர்த்தங்களை அடையாளம் காணுதல் மற்றும் மாவட்ட மட்டத்தில் அனர்த்த தோற்றப்பாடுகளை உருவாக்குதல் அந்த அபாய நடவடிக்கைகளுக்கான ஆராய்ச்சி பங்களிப்பினை வழங்குதல் ஆகிய வேலைத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கியவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதில் பங்களிப்பு நல்குகின்றது.இதற்கமைய 2021 ஜனவரி மாதம் முதல் ஓகஸ்ட் மாதம் வரையிலான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் பற்றிய சுருக்கம் பின்வருமாறகும்.

அட்டவணை 4.9: 2021ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

செலவுத் தலைப்பு	கருத்திட்டம்	**2021** ஆம் ஆண்டுக்கானந ஒதுக்கீட்டு நிதி (ரூ.மி)	நிதி தேர்ச்சி (ரூ.மி.)	பௌதீக தேர்ச்சி **(%)**
3-2509	அனர்த்த தணிப்பு கருத்திட்டங்கள்	350	157.65	75
10-2509	அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்	08	1.68	55
7-2509	அனர்த்த அபாய மதிப்பீடு	10	0.18	55

4.3.1 அனர்த்தத்த தணிப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

இலங்கையிலுள்ள அனர்த்த தணிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் இப் பிரிவின் பிரதான பணியாக அமைந்துள்ளதுடன் இதன்போது ஒவ்வொரு வருடத்துக்கும் பொதுத் திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினை முகாமைத்துவம் செய்தவாறு அனர்த்த தணிப்பு முன்னுரிமை பட்டியலுக்கு அமைய கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்போது பல்வேறு அனர்த்த தணிப்பு வேலைத்திட்டங்கள் நிரல் அமைச்சுக்களால் அந்த அமைச்சுக்கு உரித்தான நிதியினை கொண்டு மேற்கொள்வதற்காக ஆற்றுப்படுத்த படுவதுடன் முன்னுரிமை க்கு அமைய ஏனைய அனர்த்த தணிப்பு பிரேரணைகளை நடைமுறைப்படுத்துதலானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால்

மேற்கொள்ளப்படுகின்றது. அனர்த்தம் பற்றிய தரவுகள் மற்றும் மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்படும் பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ள தணிப்பு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ரூ.350 மில்லியன்2021ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2021ஆம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதியில் 22 மாவட்டங்களில் 59 கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக முன் வைக்கப்பட்டுள்ளதுடன் மாவட்ட மட்டத்தில் குறிப்பிட்ட கருத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான கேள்வி பத்திரங்களைக் கோருதல், கேள்வி பத்திரங்களை வழங்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துவதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பல்வேறு காரணங்களுக்காக ரத்து செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் புதிய கருத்திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் இவற்றில் சிலவற்றுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டில் 16 கருத்திட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய 2021ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியில் 40 கருத்திட்டங்கள் பௌதீக ரீதியில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 10 கருத்திட்டங்களை 2022ஆம் ஆண்டுக்காக மீதப்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது. மீதப்படுத்துவதற்காக அங்கிகாரம் கோரப்பட்டுள்ள கருத்துக்களின் பெறுமதி ரூ 69.93 மில்லியன் ஆகும்.

ஒட்டுமொத்த தணிப்பு கருத்திட்டங்களுக்கான செலவாக 2021ஆம் ஆண்டில் ரூ.157.65 பதிவாகியுள்ளதுடன் பணத்தை செலுத்த முடியாது கையிருப்பிலுள்ள பற்றுச் சீட்டுக்களின் பெறுமதி 45.88 மில்லியன் ஆகும். இதற்கமைய ஒட்டுமொத்த கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 75% ஆகும். கையிருப்பிலுள்ள பற்றுச் சீட்டுக்களை விடுத்து நிதி முன்னேற்றம் 45% ஆகும். கையிருப்பிலுள்ள பற்றுச்சீட்டுக்கள் சகிதம் நிதி முன்னேற்றம் 58% ஆகும். கொவிட் 19 பெரும் தொற்று குறிப்பிட்ட கருத்திட்டங்கள் மீது நேரடி தாக்கத்தை செலுத்தியதுடன் நிலப் பிரதேசத்தில் மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகளை மேற்கொள்வதில் அடிப்படை தொழில்நுட்ப நடவடிக்கைகளையும் மேற்கொள்வது முதல் கேள்விப் பத்திரம் கோருவது உள்ளிட்ட அனைத்து சந்தர்ப்பங்களிலும் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்ந்துள்ளது. ஒரே கருத்திட்டத்துக்காக மீண்டும் மதிப்பீடுகளை தயார் செய்வது முதல் மீண்டும் கேள்வி பத்திரம் கோருவது வரை யிலான செயல் முறையினை மேற்கொள்ள வேண்டிய நேர்ந்துள்ள மையினால் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக எதிர்பாராத காலத்தை செலவிட வேண்டி ஏற்பட்டுள்ளமையும் பிரதான சவாலாக அமைந்துள்ளது. மூலப்பொருட்களின் விலை எதிர்பாராத வகையில் நிகழ்ச்சிக்கு உட்படுதலும் மூலப் பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்கள் காரணமாகவும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்த கையில் சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்ந்துள்ள சந்தர்ப்பங்களை போன்றே பண முற்பணம் கிடைப்பதற்கு தாமதமடைதல் காரணமாக கருத்திட்ட பற்றுச்சீட்டுக்களை தீர்க்கும் வரையில் கருத்திட்டத்தின் எதிர்கால செயற்பாடுகள் தாமதமடைவதையும் காணமுடிகின்றது.



நகரில் கழிவுநீர் வழிந்தோடுவதற்கான கால்வாய முறைமையை நிர்மாணித்தல் படிமுறை (ii) அம்பாந்தோட்டை



நகரில் கழிவுநீர் வழிந்தோடுவதற்கான கால்வாய முறைமையை நிர்மாணித்தல் படிமுறை (ii) கட்டுவன, வீரக்குட்டிகொட

4.3.2 அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளீர்த்தல்

அனர்த்த முகாமைத்துவ விடயத்தை கூட்டாக மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் இதில் அனைத்து துறைகளிலும் பங்களிப்பு அத்தியாவசியமாகின்றது. இயற்கையாகவும் மனிதர்களாலும் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் ஏற்படக்கூடும் என்பதனால் நீர் தரை மற்றும் வான் ஆகிய அனைத்து துறைசார் செயற்பாடுகளுடன் அனர்த்த அபாய தணிப்பினை ஒருங்கிணைத்தல் வேண்டும். நடைமுறை ரீதியாக கருத்தில் கொண்டு நேரடியாக அனர்த்த அபாயம் முகாமைத்துவத்தில் பங்களிப்பினை பெறவேண்டிய 10 துறைகளை அடையாளம் கண்டு குறிப்பிட்ட துறைகளில் அனர்த்த அபாய தணிப்பினை அபிவிருத்தியின் பிரதான சுற்றோட்டத்தில் உள்ளூர்ப்பதற்கான கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கமைய பின்வரும் துறைகளை அனர்த்த அபாய தணிப்புக்கான பிரதான சுற்றோட்டத்தில் உள்ளதற்கான வழிகாட்டல்களை தயார் செய்யும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

1. தேசிய திட்டமிடல்
2. நகர அபிவிருத்தி
3. தேசிய மற்றும் மாகாண வீதிகளை நிர்மாணித்தல் மற்றம் அபிவிருத்தி செய்தல்
4. உள்ளூராட்சி
5. சுற்றாடல்
6. தனியார் துறை
7. சுகாதாரம்
8. நீர் மற்றும் துப்பரவேற்பாடு
9. சுற்றாடல் தாக்க ஆய்வு
10. உள்நாட்டு அனர்த்த முகாமைத்துவ செயல்நுணுக்கம்

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது குறிப்பிட்ட வழிகாட்டல்களை அச்சிட்டு உரிய துறைகளுக்கு வழங்குவதற்கு எதிர்பார்ப்பதுடன் குறிப்பிட்ட வழிகாட்டல்கள் குறிப்பிட்ட

ஒவ்வொரு துறையிலும் நடைமுறைப்படுத்தப் படுவதைத் இலகு படுத்துவதற்கும் எதிர்பார்க்கின்றது. இதன்போது தொழில்நுட்ப செயற்பாட்டு குழு அங்கத்தவர்களின் தலைமையில் குறிப்பிட்ட துறைசார் நிறுவனங்களில் அனர்த்த அபாய முகாமைத்துவத்தை உள்ளீர்ப்பதற்கான

குழுக்களை அமைத்து இதன் மூலம் குறிப்பிட்ட வழிகாட்டல்களை நடைமுறைப்படுத்துவதில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கும் பின்னாய்வினை மேற்கொள்வதற்கும் எதிர்பார்க்கின்றது. இந்த வேலைத் திட்டமானது உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன் பின்னர் இதனை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

4.3.3 கல்வித்துறையில் அனர்த்த அபாயத் தணிப்பினை உள்ளீர்த்தல்

அனர்த்த அபாயத்தை தணிப்பினை சமூக மயப்படுத்துவதற்கு மிகப் பொருத்தமான ஊடகமாக பாடசாலை முறைமையை அறிமுகப் படுத்த முடியும் என்பதுடன் சிறுவயது முதல் அனர்த்த அபாயம் முகாமைத்துவத்தை சிறு பிள்ளைகளின் மனதில் பதிய வைப்பதன் மூலம் அனர்த்த அபாயம் தணிப்பு மீதான நடத்தை மீதான மாற்றத்தை மானிட சமூகத்தில் நிலைநாட்டுவதற்கான வாய்ப்பு உருவாகின்றது.

அனர்த்த அபாய தணிப்பானது வாழ்க்கையில் ஒரு பழக்கமாக இணைவதன் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த துறைகளிலும் அனர்த்த அபாய தணிப்பினை நடைமுறைப்படுத்துவது இலகுவாக அமையும். பல்வேறு துறைகளில் அனர்த்த அபாய தணிப்பினை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நிலையான அனர்த்த அபாய தணிப்பு கலாச்சாரமொன்றை உருவாக்குவது இதன் நீண்டகால நோக்கமாக அமைந்துள்ளது.

இதற்கமைய பாடசாலை மாணவர்களுக்கு அடிப்படை அனர்த்த முகாமைத்துவ கோட்பாடுகள் தொடர்பில் அறிவுறுத்தியவாறு அனர்த்த அபாய மதிப்பீட்டை பாடசாலை மட்டத்தில் மேற்கொள்வதற்காக கடந்த வருடம் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலம் கையேடுகள் நிர்மாணிக்கப்பட்டு அச்சிடப்பட்டு பகிர்ந்து அளிக்கப் பட்டுள்ளதுடன் இந்த வருடம் ஆங்கில மொழி மூலம் கையேடுகள் நிர்மாணிக்கப்பட்டு 1000 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன. இப்புத்தகங்கள் சர்வதேச பாடசாலைகளுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

4.3.4 அனர்த்த அபாயத்தை தணிப்பதில் நிறுவன ரீதியான கடமைகள் மற்றும் பொறுப்புகளையும் மக்களுடைய உரிமைகளையும் உள்ளடக்கிய ஆவணத்தைத் தயார் செய்தல்.

குறிப்பிட்ட விடயம் தொடர்பில் அனர்த்த அபாய தணிப்பில் முக்கியமாக நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்கேற்பில் ஆரம்ப செயலமர்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டதுடன் இதற்கான ஆரம்ப ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது.



4.3.5 வழக்கமான பயிற்சிகளை மேற்கொள்ளுதல் பற்றிய வழிகாட்டல்களை தயார் செய்தல்

கட்டமைப்பு ரீதியற்ற அனர்த்த அபாய தணிப்பு செயற்பாடுகள் மீதான வழக்கமான பயிற்சிகளை மேற்கொள்வதற்காக வழிகாட்டல்கள் உருவாக்கப்படுவதுடன் இந்த வருடம் இதன் அச்சிட்டு பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

4.3.6 செந்தாய் சட்டகத்தை நடை முறைபடுத்துதல்

இதற்கான 100 பங்குதாரர்களை உள்ளடக்கிய செயலமர்வொன்று நடாத்தப்பட்டுள்ளடன் ஒவ்வொரு துறைகளுக்குமான குறிப்பிட்ட தொழில்நுட்ப ழுக்களை உருவாக்கியவாறு செந்தாய் சட்டகத்தை நடைமுறைப்படுத்துவதற்கான எதிர்கால நடவடிக்கைகள் குறித்து இங்கு திட்டமிடப்பட்டுள்ளன.

4.3.7 நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் வானிலை மற்றும் காலநிலை மாற்றங்கள்

புவியியல் முரண்பாடுகள் பொருளாதார சமூக மற்றும் பௌதிக பின்னணி ஆகிய பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அனர்த்த அபாய நிலைமைகள் குறித்து குறிப்பிட்ட எதிர்வுகூறலை விஞ்ஞானரீதியாக மேற்கொள்வதற்கான இயலுமை காணப்படுவதுடன் பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் மற்றும் அறிக்கைகளும் பயன்படுகின்றன.

மேலும் அனர்த்தமொன்று நிகழும் பட்சத்தில் ஒவ்வொரு அனர்த்தத்திற்கும் இலக்காகக் கூடிய பிரதேசங்கள் பாதுகாப்பு இடங்கள் போன்ற பல்வேறுபட்ட தகவல்களை முறையாக நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு பயன்படுத்தக்கூடிய முறையில் தயார் செய்வதும் மிக முக்கியமானதாகும். மேலும் அனர்த்த அபாய மதிப்பீடு தொடர்பிலான தகவல்கள் மூலம் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான பல்வேறு திட்டங்களை மேற்கொள்வதும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதும் இலகுவாக அமையும்.2019ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் நிறைவு செய்யப்பட்ட அனர்த்த அபாய சுட்டியானது அச்சிடப்பட்டு 2020ஆம் ஆண்டில் விநியோக மற்றும் விழிப்புணர்வூட்டல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அபாய சுட்டியானது வருடா வருடம் இற்றைப் படுத்தப்பட்டு சுட்டியின் மாறிகளை

ஆய்வு செய்ய வேண்டும் என்பதுடன் இதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.3.8 தெரிவுசெய்யப்பட்ட 10 நகரங்களில் அனர்த்த அபாயம் மதிப்பீடு

தெரிவு செய்யப்பட்ட 10 நகரங்களில் (கம்பஹா நீர்கொழும்பு மன்னார் களுத்துறை கடுவலை கொலன்னாவை மொரட்டுவை வல்வெட்டித்துறை பருத்தித்துறை மற்றும் சாவகச்சேரி) அனர்த்த முகாமைத்துவ நகர மட்டத்திலான தரவுகளை சேகரிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 10 நகரங்களுக்கான தரவுகளை கனணிமயப்படுத்துவதும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பிலான அபாய தோற்றப்பாடுகளை உருவாக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் இடர்களை வரைபடமாக்குதல் இலக்காகதலை அளவிடுதல் மற்றும் அபாய கணிப்பீடு நிறைவு செய்யப்பட்டுள்ளது

4.3.9 கல்வித்துறையில் அனர்த்த அபாயத்தை மதிப்பீடு செய்தல்

தேசிய மட்டத்தில் கல்வித்துறையில் பாடசாலைகளில் அனர்த்த அபாயத்தை மதிப்பீடு செய்வதற்கான தேவைப்பாடு குறித்து கல்வித்துறையிலிருந்தே பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட துடன் இது காலத்தின் தேவையாவும் அமைந்துள்ளது. இதற்கமைய இலங்கையினுள் பாடசாலைகளுக்கான அபாய சுட்டிகளை தயாரிப்பதற்கு தேவையான ஆரம்பக் தலையீட்டை இந்தப் பிரிவு மேற்கொண்டது.

கல்வி அமைச்சுடன் ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகள் மேற்கொண்டதன் பிற்பாடு கல்வி வலய பணிப்பாளர்கள் மற்றும் அதிபர்களை அறுவுறுத்தியவாறு குறிப்பிட்ட அபாய சுட்டிகளை தயாரிப்பதற்கான தரவுகளை சேகரிப்பதற்கான உரிய படிவத்தை விநியோகிக்கும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட தரவுகள் தற்போது சேகரிக்கப்பட்டு கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கமைய நாட்டில் 8000 பாடசாலைகளின் வினா கொத்துக்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் இதில் 3000 வினாக்கொத்து களின் தரவுகள் குறிப்பிட்ட தரவு கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. தமிழ் மொழியில் பொது செய்யப்பட்டுள்ள வினாக்களை தரவை முறைமையில் சேர்க்கும் பணிகள் மாவட்ட உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலைகளில் அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான தீர்மானங்களை மேற்கொள்கையில் இந்த மூலாதாரங்கள் முக்கியத்துவம் பெறுவதுடன் அனர்த்த அபாய தணிப்பு பற்றிய அணுகுமுறை களுக்கும் இது உதவியாக அமைகின்றது.

4.3.10 அனர்த்த அபாயத்தை தணிப்பதற்காக உயர் அதிக அபாயம் மிக்க துறைகளை அடையாளம் கண்டு அனர்த்த அபாயத்தை மதிப்பீடு செய்யும் வேலைத்திட்டம்.

செந்தாய் சட்டகத்துக்கு அமைவாக உள்ள உலகளாவிய செயற்றிட்டத்தினுள்ளும் அபாயத்தை தணிப்பதற்கான உபாய வழி முறையை திட்டத்திற்கு அமையவும் 2030ஆம் ஆண்டளவில் அனர்த்தங்களினால் பாதுகாக்கப்பட்ட நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டதொரு செய்முறையின் தேவைப்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய அனர்த்தங்களுக்கு இலாகா வதற்கான உயரிய

சாத்தியப்பாட்டை கொண்டுள்ள துறைகள் மீது விடே கவனம் செலுத்தியவாறு குறிப்பிட்ட துறைகளில் அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான தொழில்நுட்ப அணுகுமுறையின் தேவைப்பாடு அடையாளம் காணப்பட்டுள்ளது.இதன்போது பல்வேறு தேவைகளை கொண்டுள்ள பிள்ளைகள் வாழுகின்ற விசேட பராமரிப்பு நிலையங்கள் சிறுவர் இல்லங்கள் வயோதிபர்கள் இல்லங்களைக் கருத்தில் கொள்கையில் இவர்கள் அனர்த்தங்களுக்கு ஆளாகக்கூடிய உயரிய வாய்ப்பினை கொண்டுள்ளவர்கள் ஆகையால் அவர்களது அனர்த்த அபாயத்தை மதிப்பீடு செய்வது கட்டாயமானதாக அமைவதுடன் இந்த மதிப்பீட்டுக்கு அமைய அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான தீர்மானங்களையும் ஏற்றுக்கொள்வதும் நடைமுறைப்படுத்துவதும் இலகுவாக அமையும். இதற்கமைய 2020ஆம் ஆண்டில் குறிப்பிட்ட குழுவினர் தொடர்பில் தேசிய மட்டத்தில் அனர்த்த அபாய மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டது உடன் இதற்காக குறிப்பிட்ட துறைகளிலான இரட்டை தரவுகளை சேகரித்து அதன் பிற்பாடு வினாக்கொத்து தயார் செய்யப்பட்டு தரவுகள் சேகரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

தற்போது 25 மாவட்டங்களை உள்ளீர்த்தவாறு உத்தியோகத்தர்களை அறிவுறுத்தி வினாக்கொத்தினை பகிர்ந்தளித்தல் தரவுகளை சேகரித்தல் மற்றும் கணினி மயப்படுத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

4.3.11 அனர்த்த அபாய மதிப்பீடு தொடர்பில் பங்காளி நிறுவனங்களுடன் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் செயலமர்வு

அனர்த்த அபாய தணிப்பு தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் கருத்திட்ட பிரதிநிதிகளுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் செயலமர்வொன்று இடம்பெற்றதுடன் இதன்போது ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அபாய மதிப்பிட்டுக்காக பயன்படுத்தப்படுகின்ற செயன்முறைகள் தொடர்பில் உடன்பாடு எட்டப்பட்டது.



4.3.12 அனர்த்தங்களின் போதான இழப்புகள் மற்றும் சேதங்கள் மீதான மதிப்பீடு

அழுத்தங்களின் போதான இழப்புகள் மற்றும் சேதங்கள் மீது மதிப்பீடுகளை மேற்கொள்ளும் பணிகள் பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன் இதற்காக தரவுகளை ஏற்படுத்துவதற்கான செய்முறைகளை உருவாக்குவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள துறைகளின் கொள்திறன் அபிவிருத்தியை மேற்கொள்ளுதலும் இதன் கீழ் இடம்பெறுகின்றது.

பங்காளி நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கான இழப்புகள் மற்றும் சேதங்கள் பற்றிய தரவும் முறைமையை அறிமுகப்படுத்துவதற்காக இத் தரவு முறைமையில் தரவுகளை உள்ளடக்குதல் தொடர்பில் பிரயோக பயிற்சி வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டதுடன் இதில் தேசிய நீர் வழங்கல் சபை மின்சார சபை நகர அபிவிருத்தி அதிகார சபை கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆகியவை பிரதிநிதித்துவம் செய்தன.

4.3.13 Desinventra தரவுக் களஞ்சியத்தை இற்றைப்படுத்துதல்

அனர்த்தங்கள் பற்றிய கடந்தகால தரவுகள் அனைத்தையும் உள்ளடக்கிய தரவு வங்கியானது www.desinventra.lk_ என இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது. இத்தரவு முறைமையானது சுயமாக இற்றைப்படுத்தப்படுவதுடன் புதிய தரவு மூலாதாரங்களை அடையாளம் கண்டவாறு மிகவும் சரியான தரவு முறைமையாக முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

4.3.14 riskinfo அபாய தரவு இணையத்தளம் (riskinfo web potal)

இங்கு புவியியல் தரவுகள் (Geospatial Data) இந்த இணையதளத்தில் (upload) பதிவேற்ற படுகின்றன. இப்புவியியல் தரவுகள் உள்நாட்டு வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களால் பயன்படுத்தப்படுவதுடன் இதன் மூலம் அனர்த்தம் நிகழும் நிகழக்கூடிய பிரதேசங்கள் குறித்து ஆய்வு செய்தல் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் எதிர்கால திட்டங்களை தயார் செய்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.2021ஆம் ஆண்டில் நோக்கிய இரு பருவ காலங்களுக்கான வரைபடங்களை தயார் செய்தலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.3.15 செய்மதி புகைப்படங்களை பயன்படுத்தி அனர்த்தத்திற்கு இலக்காகி உள்ள பிரதேசம் மற்றும் தரவுகளை வெளிப்படுத்துதல்

அனர்த்தமொன்றின்போது அனர்த்தத்திற்கு முன்னரும் பின்பும் செய்மதி புகைப்படங்களை பெற்றுக்கொள்ளுதல் (International Charter) மற்றும் (Sentiual Asia) மேற்கொள்ளப்படுவதுடன் இதன் மூலம் அனர்த்தம் ஏற்பட்டுள்ள பிரதேசம் பற்றிய தரவுகள் வெளிப்படுத்தப்படுகின்றன.

4.3.16 மாவட்ட மட்டத்தில் பொது மக்களின் முறைப்பாடு கோரிக்கை பிரேரணைகள் மற்றும் உசாவுதல்களுக்கு பதிலளித்தல்

அனர்த்தங்களை தணிப்பது தொடர்பில் பொதுமக்களினால் அனர்த்த முகாமைத்துவ நிலையங்களுக்கு முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் கோரிக்கைகள் பிரேரணைகள் மற்றும் உசாவுதல்களுக்கு பதிலிருத்தல் இப்பிரிவினால் மேற்கொள்ள படுவதுடன் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு ஏற்ப இவற்றுக்கான பதிலிருப்பு தீர்மானிக்கப்படும்.

4.3.17 வேறு நிறுவனங்களுடனான ஒருங்கிணைந்த கருத்திட்டங்களை முன்னெடுத்தல்JICA கருத்திட்டம்

காலநிலை மாற்றங்கள் நிகழும் அனர்த்தங்களை அடிப்படையாகக்கொண்டு கருணைக்கிழங்கை ஆற்றுப் பள்ளத்தாக்கில் காணப்படும் அனர்த்தங்களை தணிப்பதற்காக **JICA** நிறுவனத்துடன் விடே கருத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்காக தற்போது உடன்பாடு கட்டப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது அடிப்படை மதிப்பிடும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் நிலவுகின்ற உலகளாவிய பெரும் தொற்று காரணமாக கருத்திட்டத்தின் அடைவுகளை எட்டுவதில் சிக்கல் காணப்படுகின்றது.



4.4 அவசர நடவடிக்கை நிலையம் (Emergency Operations Division)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதான பிரிவான அவசர நடவடிக்கை நிலையமானது 24x7 மணி நேரம் முழுவதும் தொழிற்படுகின்றது. மேலும் அனர்த்த நிலைமைகளின் வளர்ச்சி முறை பதில் இருப்புகளை மேற்கொள்ளவேண்டிய நிலைகள் குறித்து தொடர்ச்சியாக மதிப்பீடுகளை மேற்கொண்ட வாறு பதிலிருப்பினை மேற்கொள்கின்றது. அனர்த்தங்களினால் ஏற்படக்கூடிய தாக்கங்களை மதிப்பீடு செய்து அதற்கமைய நேரக்கூடிய அனர்த்தங்களுக்கு பதிலிருப்பதற்கான சிக்கன் முறையை தீர்மானிப்பதும் இதன் மூலம் எதிர்காலத்தில் முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் அனர்த்தங்களுக்கு பதிலிருப்பதற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்து பல்வேறுபட்ட முன்னறிவித்தல் முறைகளை கையாண்டவாறு மக்கள் மற்றும் உரிய பங்காளி நிறுவனங்களை அறிவுறுத்தும் பணிகள் அவசர கருமமாற்றல் கூடத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.



அவசர நடவடிக்கை நிலையம

4.4.1 இடம்பெற்றுள்ள அனர்த்தங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள அவசர நடவடிக்கைகள்- 2021

வெள்ளம் (2021 பருவப் பெயர்ச்சி மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளம்)

2021 ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் பதிவாகியுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக 728583 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதுடன் 36பேர் உயிரிழந்துள்ளார்கள். பாதிக்கப்பட்டுள்ள ஒட்டு மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை 196315 ஆகும். மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு அலகினால் உதவி கோரப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அவசர கருமமாற்றல் பிரிவானது பொலிசார் மற்றும் முப்படைகளின் உதவியுடன் மீட்டல் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லுதல் மற்றும் அவசர நிலைமைகளின் போதான கருமமாற்றல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துள்ளது.

